# செங்குந்த மித்திரன்

கலங்காது கண்டவினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.



மகாத்மா காந்தி ஆந்திர தேசத்தில் சீதா நகர ஆச்ஸிரமத்திற்கு நடந்து செல்லும் காட்சி. பாதை, மிகுந்த சதுப்பு நிலமாயிருந்தும் வண்டியில் ஏற மறுத்து [illegible]ர்களுடன் நடந்தே போகின்றார். அவருக்குப் பின்புறத்தில் கோதா
கூஉ வரி ஆறு ஓடுகின்றது. ஸ்ரீ சாம்பமூர்த்தி முதலியோர் வழிகாட்டிக்கொண்டு முன்னே செல்லுகின்றனர்.

[illegible] :—பி. செ. மாணிக்கவாசக முதலியார்.
தி. நா. சபாபதி முதலியார்.

A. JAGANNATHAN

...RE REGIST...
2 APR 19..
...ADRA...
72
1592ம211,N34ஙு
N27.8.3
208443

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0—0

## சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தைமீ) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினால் சந்தா நெம்பரைக் குறித்து இங்லிஷ் மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விட வேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்கு, தென்னாபிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த [illegible] மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செ[illegible]

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 8

அரைப்பக்கம் ரூ. 4 கால்பக்கம் ரூ. 3

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

| தொகுதி—அ | ஸ்ரீமுக வூல பங்குனிமீ | பகுதி ௩ |
|---|---|---|

## உள்ளடக்கம்


பத்திரிகாசிரியர் முன்னுரை ... 126
நினைவுக் குறிப்புகள் .... 130
மதிப்புரை ... 134
மானவஸீகத் தபால் ... 135
அதிர்வெடி ... 137
நன்கொடை ... 138
சமர்ப்பயாமி .... 139
அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! ... 141
வைத்தியப் பகுதி ... 144
தமிழர் மாண்பு ... 146
விகடத் துணுக்குகள் ... 148
செங்குந்த யாத்திரைவாசி .... 150
கதம்ப விநியோகம் ... 153
கூண்டோடு கைலாசம் ... 155
நமது தபால் பெட்டி ... 158
வர்த்தமானம் ... 162
நேயர்கள் கடிதம் ... 171
கிளர்ச்சி ... 172


OFFICE OF THE REGISTRAR [illegible]
12 APR 1934
MADRAS

208443

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

செங்கே ழுடுத்த சிவனடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் ததிர்நிற்பனே.

(ஸ்ரீ அருணகிரிநாதர்)

## ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ! இதுதகுமோ! இதுமுறையோ! இதுதருமந்தானோ!

“ஹே, ஈஸ்வரா! நீ எங்கிருக்கிறாய்? உன்னை ஏழை பங்காளன், அனாதை ரட்சகன் என நூல்களெல்லாம் முறையிடுகின்றனவே. எமது முறையீடு உமது திருவுள்ளத்திற் பற்றாததென்னோ? நாங்கள் பட்டினியால் வதையும் துன்ப ஒலி உமது திருச்செவிக்கு எட்டாததென்னோ? ஒரு சிலர் மாடி வீட்டில் மஞ்சத்தின் மீது துயின்று, பொன்னுடை யுடுத்துப் புதுப்புது பலகார வகைகளை வேளை யின்றி—அளவின்றித் திணிக்க, மற்றொரு பகுதியார் பொத்தற் குடிசையில், புழுதி மிக்க வெறுந் தரையில் துயின்று, கந்தலுடுத்துக் கால் வயிறு கஞ்சியேனும் நாளைக் கொரு வேளையாவது அருந்தி உயிர் வாழவும் கருணை செய்யாத காரணம் என்ன?” என்ற பிரார்த்தனையின் ஓசை எத்திசையும் இன்று கேட்கிறது. இதற்குக் காரணம் யாது?

மக்கள் வாழ்க்கைக்கு அவசியமானவை உணவும் உடையுமாகும். இந்த இரண்டையும் வழங்குவோரின் கதி, இந்தியாவில் இன்று எந்த நிலையில் இருக்கிறது என்பதை நினைக்கும்போது நெஞ்சம் குமுறுகின்றது. கலம் மூன்று ரூபாய் விற்ற நெல் இன்று முக்கால் ரூபாய் விற்கிறது. நில வருமானம், வரிக்கும் வாய்தாவுக்குமே உன்னைப் பிடி என்னைப் பிடி என்று இருக்கிறது. விவசாயிகள் வறுமை வெள்ளத்தில் மூழ்குகின்றனர்.

ஐந்து ரூபாய் கூலி பெற்ற நெசவுத் தொழிலாளர்கள் இன்று இரண்டு ரூபாய் பெறுகிறார்கள். அதுவும் நிச்சயமாய்க் கிடைக்கிறதென்பதில்லை. ஆனால் வீட்டு வரி, தண்ணீர் வரி, சாக்கடை வரி, கல்வி வரி, விளக்கு வரி, வருமான வரி, அந்த வரி, இந்த வரி எல்லாம் அவர்களை பாதாளத்தில் கொண்டு சேர்க்கிறது. அவர்கள் உண்பதெங்கே! உடுப்பதெங்கே!



1934-ம் ஆண்டு பிறந்த யோக பலனை என்னென்று கூறுவது. ஆயிரக் கணக்கான உயிர்களை பூகம்பம் விழுங்கி ஏப்பம் விட்டது போதாதென்று, இன்னும் லட்சக் கணக்கான பேர்களை ருசி பார்க்க ‘பசிப் பிணி என்னும் படர் கொடும்பாவி’ வாய் திறந்த வண்ணம் காத்துக்கொண்டிருக்கிறான். அவன் வாயில் சிக்காதபடி இவர்களுக்கு விமோசனம் அளிக்க வழி இல்லையா?

நெசவுத் தொழிலாளர் இன்று வருமானமின்றிப் பெருங் கஷ்டப் படுகிறார்கள். இக்கஷ்டம் தோன்றியது ஏன்? அதை சீர்படுத்த முடியுமா?

முதலாளிகள், தொழிலாளர் கூலியைக் குறைத்ததுதான் இந்தக் கஷ்டத்திற்குக் காரணமெனச் சிலர் சொல்லுகிறார்கள். இது உண்மையான காரணமாகுமா? அப்படியாயின் முதலாளிகளாவது அதிக லாபம் அடைதல் வேண்டுமல்லவா. முதலாளிகள் படுங் கஷ்டம் தொழிலாளர் கஷ்டத்திற் சற்றும் குறைந்ததாக இல்லை. வியாபாரத்தை நம்பிய முதலாளிகள் என்ன செய்வதெனத் தோன்றாது விழிக்கிறார்கள். அவர்கள் வியாபாரம் மும்முரமாய் நடந்த காலத்தில் அதிக கூலிகொடுத்து, போட்டியிட்டுத் தரிகாரர்களிடம் சரக்குகளை வாங்கியது நமக்குத்தெரிந்த விஷயம். இதை நாலைந்து ஆண்டுகளுக்கு முன் பிரத்தியட்சமாய்ப் பார்த்திருக்கிறோம். வியாபார மந்தத்தால் இன்று உலக முழுதுமுள்ள வியாபாரிகள் மூச்சுத் திணறுகிறார்கள். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்து வருகிறது. இந்தியாவில் நெசவுத் தொழிலாளர் பல இடங்களில் தொழிலையே அடியோடு விட்டுவிட்டார்கள். புதுவையை யடுத்துள்ள கிராமங்களி லுள்ளவர்கள் ரோட்டு வேலை, மணிலாக்கொட்டை கம்பெனி வேலை முதலிய பல கூலி வேலைகள் செய்யத் தொடங்கிவிட்டதாகவும், பலர் ஊரை விட்டுச் சென்று மறைவாக பிச்சை ஏற்று வாழத் தொடங்கிவிட்டதாகவும் தாய் நாடு பத்திரிகை கூறுகிறது. சென்னையை யடுத்த கிராமங்களில் தரி வேலை நிறுத்தஞ் செய்தார்கள். இவ்வகை யெல்லாம் நெசவாளர் கஷ்டத்திற்குப் பரிகாரமாகுமா?

பல ஷேர்கள் கொண்ட தொழிலாளர் மூலதனம் ஒன்று திரட்டி, கூட்டுறவு முறையில் வர்த்தகம் செய்தால் பயனளிக்குமெனச் சிலர் கூறுகிறார்கள். வர்த்தகம் செழிப்புற்றாலொழிய இந்தக் கூட்டுறவு கம்பெனிகள் மட்டும் லாபத்தில் வேலை செய்வது சாத்தியமாகுமா? மற்ற வர்த்தகர்கள் விற்கும் விலையைக் காட்டிலும் அதிகமாக இவர்கள் விற்க முடியுமா? இந்தக் கஷ்டத்தின் மூல காரணத்தை அறிந்து அதன் ஆணி வேரை நெருப்பிட்டு நிர்மூல மாக்கினாலொழிய நெசவாளர் கஷ்டம்

நீங்குவது கஷ்டமேயாகும். வர்த்தக மந்தமே இந்தக் கஷ்ட நிலைகளுக்குக் காரணம். அதனை ஒழித்து நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க இந்திய சர்க்கார் முனைந்தாலொழிய தொழிலாளர் நிலை உயர்வது சிறிதும் முடியாத காரியம். அரசாங்கத்தார் சற்றும் தாமதமில்லாமல்,

(1) ஜப்பான் ஜவுளிகளைக் கூடிய வரையில் தடுத்துவிட வேண்டும். அந்த ஜவுளி இறக்குமதியாகிற வரையில் நெசவுத் தொழிலுக்கு விமோசம் ஏற்படுவதற்கில்லை. ஜப்பான் லுங்கிகள் (கைலிகள்) $1\frac{1}{4}$-ரூபாய்க்கு விற்கின்றபோது, இந்திய லுங்கி நெய்வதற்கு கூலி மட்டும் $1\frac{1}{4}$-ரூபாய் தருவதும் போதாதென்றால் இது எவ்வாறு விற்பனையாகும். நெசவுத் தொழிலாளிகளைக் கலந்து கொள்ளாமல் இந்திய மில்காரர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது ஒரு சிறிதும் நியாயமாகாது. எருதின் நோய் காக்கை எப்படி உணரும். மில்காரர் தங்கள் குறைகளை மட்டும் நிவர்த்தித்துக் கொள்ள வழிதேடினார்களே ஒழிய நெசவுத் தொழிலாளரைப் பற்றி சிறிதேனும் சிந்திக்கவில்லை. எனவே, பஞ்சு விற்பனையைப் பற்றி கவலைப்படாமல் ஜப்பான் ஜவுளிகளுக்கு காப்பு வரி விதிக்க வேண்டியது அவசியமாகும்.

(2) அரசாங்க வரிகள் 100-க்கு 75-பாகம் குறைக்கப்பட வேண்டும். ஓரணாவும் ஒரு படி அரிசியுங் கொண்டு சென்னை சைதாப்பேட்டையில் குடும்பங்கள் பிழைத்ததை நாம் பார்த்தபோது பத்தாயிரமும் இருபதாயிரமும் சம்பளம் தரவேண்டிய அவசியம் என்ன? இந்த உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தை 100-க்கு 75-வீதம் குறைத்து இந்த வரிக்குறைவை நிரப்பிக் கொள்ளலாகாதா?

(3) வரிவிதிப்புக் கமிட்டியில் (Tariff Board) நெசவுத் தொழிலாளர் பிரதிநிதியை நியமித்து, நெசவுத் தொழில் பாதுகாப்புக்கானவற்றை தாமதமின்றி யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

(4) நெசவாளர்களும் சிக்கனத்தைக் கையாள முயல வேண்டும். கூலி அதிகமாய் வந்த காலத்தில் கோயில் திருவிழாக்கள் மிக்க ஆடம்பரமாய் நடந்ததென்றால் தரித்தொழில் நிறுத்தஞ் செய்து, தரிக்கு ஓரணாவும் ஒரு படி அரிசியும் முதலாளிகளிடம் இனாம் பெற்று வாழும்போதும் தரிக்கு மூன்று ரூபாய் வீதம் வரிவசூல் செய்து, திருவிழாவை ஆடம்பரமாய்ச் செய்ய முயல்வது அடாதசெயலாகும். பட்டினியால் வதையும் இந்தக் கஷ்டகாலத்திலும் நெசவாளர் வீதியிலுள்ள தேவாமிர்தக் கடைகளுக்கு (Toddy shop) வருமானம் குறைய-



திருப்பது விந்தையினும் விந்தையாகும். இத்தீய வழக்கத்தை மிகக் கடுமையான இக்காலத்திலாவது அறவே மறந்திருத்தல் அவசியமல்லவா?

தொழிலாளர் குறைகள் நிவர்த்திக்கப்படவும், அரசாங்கத்தினர் நெசவுத் தொழிலுக்குப் பாது காப்பளிக்கவும் வேண்டுமாயின் நெசவாளர் பிரதிநிதிகள் மாகாண சட்டசபைகள் இந்தியா சட்டசபை, வரிவிதிப்புக்கமிட்டி, அவ்வப்போது நியமிக்கப்படும் சீர்திருத்தக் கமிட்டிகள் இவற்றில் இருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

இதனைக் குறித்து வாதாட அகில இந்திய நெசவுத் தொழிலாளர் சங்கம் உடனே ஸ்தாபிக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். அதன் கிளைகளாக ஒவ்வொரு மாகாணம், ஜில்லா, கிராமங்களிலெல்லாம் சங்கங்கள் தோன்றி பெருங்கிளர்ச்சி செய்யவேண்டும். அப்பொழுதுதான் வர்த்தக சங்கம், நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கம், ஐரோப்பிய சங்கம், வர்த்தக யூனியன் இவைகளுக்குப் பிரதிநிதிகள் நாமினேஷன் ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருப்பது போன்று நெசவுத் தொழிலாளர் சங்கத்திற்கும் ஸ்தானங்கள் ஒதுக்கக் கூடும். இதற்கு நெசவுத் தொழிலாளரெல்லாம் ஒரு முகமாக நின்று உழைப்பார்களாக.

அகில இந்திய நேசவுத் தொழிலாளர் சங்கம் நிறுவுவதற்கு அடுத்து வரும் தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டில் அஸ்திவாரம் போடப்படுமோயின், மகாநாடு ஓர் சிறந்த தொண்டு ஆற்றியதாக நேசவுத் தொழில் புரியும் எல்லா வகுப்பினராலும் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை. தலைவர்கள் இதைப்பற்றி ஆழ்ந்து யோசிக்குமாறு வேண்டுகிறோம்.


இனாம்! இனாம்!

ஒரு வருட சந்தா இனாம்.

ஒரு வருட முன் பணத்துடன்
ஐந்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து
அனுப்புவோர்க்கு
ஒரு வருட செங்குந்த மித்திரன்
இனாமாக அனுப்பப்படும்
எங்கே! மித்திரன் வளர்ச்சியில்
உங்களுக்குள்ள அபிமானத்தைக் காட்டுங்கள்

# நினைவுக் குறிப்புகள்

## வை-ராஜா-வை

இந்த ஒலி சென்னையின் எல்லா பாகங்களிலும் சில நாளைக்கு முன் ஒலித்தது. இவ்வொலி கிளம்பிய இடங்களுக்கு அம்யூஸ்மெண்டு பார்க்குகள் என்று பெயர். அங்கு செல்வோர் எவ்வளவு தரித்திரர்களாயினும் பிரபுக்களாகவே கருதப்படுவர். அவர்கள் வீற்றிருக்கும் ஆசனம் ஆயிரக்கணக்கான மூட்டைப் பூச்சியார்கள், பேரன் பேத்திகளுடன் சௌகரியமாக வாசஞ் செய்வதற்கான ஒட்டை உடைச்சல் மிகுந்த டெம்பரரி பெஞ்சுகளேயாயினும், அந்த இடமட்டும் ஹவுஸ் ஆப் லார்ட்ஸ் (House of Lords பிரபுக்கள் மாளிகை) என மதிப்பாகவே அழைக்கப்படும். இந்த பிரபுக்கள் மாளிகையில் ஒரு முறை புகுந்துவிட்டோர் சுகதுக்கம், இன்ப துன்பங்களை சமமாகவே கருதுவர். பெண்சாதி பிள்ளைகளின் காது கழுத்துகள் சும்மாயிருந்தாலும் பிரபுக்கள் சபையை மட்டும் இவர்களால் மறக்க முடிவதில்லை. பட்டினியால் குடும்ப முழுதும் வதைந்து கொண்டிருந்தாலும் 'ஏதோ கடவுள் இருக்கிறார். அவர்களைக் காப்பாற்றுவார்' என்ற திடசித்தத்துடன் மனைவியின் மாங்கல்யத்தில் சிறிது உரைத்தெடுத்துக் கொண்டாவது அங்கு போய்ச் சேர விரும்புவர். அங்கே எந்த நேரத்திலும் 'மூணும் நெம்பர் காலி, எட்டாம் நெம்பர் காலி. போடுங்க ராஜா போடுங்க. உங்க அதிர்ஷ்டத்தைச் சோதித்துக் கொள்ளுங்கோ. போனால் போறது சார். இன்னொரு முறைவையுங்கோ என்ற வரட்டுத் தவளைகளின் கூச்சல் இருந்தபடியே இருக்கும். காலி இடத்தைப் பூர்த்தி செய்யவே பிரபுக்கள் அங்கே போவார்கள். கடைசியில் கையில் கொண்டு போன காசுகளைத் தொலைத்ததும் பிரபுத்தன்மை மாறி முக்காட்டுடன் திரும்பிச் செல்வார்கள். இப்படி கௌரவ கொள்ளையடிக்கும் அம்யூஸ்மெண்டு பார்க்குகளில் பலவற்றை சென்ற மாதம் கார்பொரேஷன் ஒழித்துவிட்டது அநியாயமல்லவா!

## உங்களுக்குத் தலையால் நடக்கத் தெரியுமா?

வண்டிகளுக்கும், மிருகங்களுக்கும் சுங்கவரி வசூலிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், சென்னை சட்டசபையில் சமீபத்தில் கொண்டு வரப்பட்ட சுங்கவரித் திருத்த மசோதாவில் 'ஜில்லா போர்டுகளினாலோ, அல்லது அவர்கள் உதவியினாலோ கட்டப்படும் பாலங்களின்மீது செல்லும் வண்டிகள், மிருகங்கள், பாதசாரிகள் எல்லோரிடமும் டோல்ஸ் (சுங்கம்) வசூலிக்கும்



உரிமை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உண்டு' என்ற பிரிவு காணப்படுகிறது.

போகட்டும்; அந்தமட்டில் மந்திரிகள் கொஞ்சம் தயாளமுடையவர்கள் தான். வண்டிச் சக்கரங்கள், மிருகத்தின் குளம்புகள், மனிதர்களின் பாதங்கள் என்று குறிப்பிட்டிருந்தால் இவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வரிசெலுத்த வேண்டியிருக்குமல்லவா? எறும்பூரக் கருங்கல்லும் தேயுமென்பார்கள். அத்தகைய எறும்புகளுக்கு சென்னை சர்க்கார் கூடிய சீக்கிரத்தில் டோல்ஸ் விதிப்பார்களென நினைக்கிறோம்.

பாதசாரிகளிடம் வரிவசூலிக்கலாமெனக் கூறுவதால் தலையால் நடப்போரிடம் வசூலிக்க முடியாதென்பது நிச்சயம். உங்களுக்குத் தலையால் நடக்கத் தெரியுமா?

## ஸி. ஐ. டி. அரசாங்கம்

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இனி நடந்து கொள்ளவேண்டிய முறையைப் பற்றி இந்திய சர்க்கார் சில திட்டங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அதன்படி, கீழ் உத்தியோகஸ்தர்களோ உறவினர்களோ ராஜீய இயக்கங்களில் ஈடுபடுவார்களானால் அதற்கு இந்த உத்தியோகஸ்தர்களே பொறுப்பாளிகளாகக் கொள்ளப்படுவார்களாம். எனவே, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இனிமேல் தங்கள் உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு முதலாவதாக ஸி. ஐ. டி. வேலையைப் பார்த்துக்கொண்டு அதற்கடுத்த படியாகவே தங்கள் டியூடிகளை கவனிக்கவேண்டும். அரசாங்க முழுதுமே ஸி. ஐ. டி. மயமாக விளங்கவேண்டுமென்பது இந்திய சர்க்கார் கருத்து போலும்.

## மின்சார விசிறிக்கு ரூ. 3¾ லட்சம்

புதிய டெல்லி ஒரு பெரும் பூதம். எவ்வளவு பணம் வந்தாலும் ஒரே மூச்சில் விழுங்கிவிடுகிறது. இது வரை எத்தனையோ கோடி ரூபாயை சற்றும் சளைக்காது கவளீகரணம் செய்திருக்கிறது. இவ்வாண்டு வரவு செலவு திட்டத்திலும் 9-லட்சம் ரூபாய் புது டெல்லியின் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை எதற்காகத் தெரியுமா?

சர்க்கார் கட்டடங்களிலுள்ள மின்சார விசிறிகள் போதவில்லையாம். அதிகமான விசிறிகள் அமைக்க வேண்டுமாம். அதற்காக ஒரு சொற்ப தொகை, மூன்றே முக்கால் லட்சம் ரூபாயாம். பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கும் கட்டடங்களில் நாற்காலிகள் புதிதாய் வாங்கிப் போடவேண்டுமாம். அதற்காக ஒரு லக்ஷத்து அறுபதினாயிரமாம். வைசராயின் பியூன்கள் தங்குவதற்குக் கட்டடம் அமைக்க ஐம்பத்தையாயிரமாம். இப்படி இன்னும் எத்தனையோ முக்கியமான ஐடங்கள். மின்

சார விசிறிக்கும் நாற்காலிக்கும் 9-லட்சம் ரூபாய் செலவழிப்பதைப் பார்த்து, ஒண்ட நிழலுமில்லாது தவிக்கும் ஏழை இந்தியர்கள் வயிறு வெடித்துப் போவது இயற்கை யல்லவா?

**போலிக் கதரின் தொல்லை**

அநேகமாய் ஒவ்வொரு ஊரிலும் கதர் கடை இருக்கிறது. சென்னையில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. வெளியில் உள்ள போர்டுகளில் மட்டும் அசல் கதர் இங்கு கிடைக்கும் என எழுதியிருக்கும். உள்ளே சென்று பார்ப்போமாயின் கையினால் நெய்த கதர் கிடைப்பது அருமையாயிருக்கும். விசாரித்தால் ஈரோட்டுக் கதர், கல்லிடைக் குறிச்சிக் கதர், குற்றாலத்துக் கதர், ஜப்பான் கதர், மில் கதர் எனப் பலவிதமாய்க் கூறுவர். இந்தக் கதர்களினால் உண்மைக் கதர் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது என்பது உண்மையாகும். இந்தப் போலிக் கதர்களின் உற்பத்தியைத் தடுப்பதற்காக இந்தியா சட்டசபையில் 'கதர் பாதுகாப்பு மசோதா' ஒன்று நிறைவேற்றப்பட் டிருக்கிறது. இம்மசோதாவில் 'கையினால் நூற்று கையினால் நெய்யப்பட்ட ஆடைகள் மட்டும் கதர் எனப்படும்' என்று தெளிவாகக் குறிக்கப் பெற்றிருப்பதோடு, போலிக்கதர் விற்பனை செய்வோர்களை தண்டிப்பதற்கும் விதிகள் அமைக்கப்பட் டுள்ளன. இனி, அந்தக் கதர் இந்தக் கதர் எனக்கூறி ஏமாற்றவோ, போலிக் கதரையே உண்மைக் கதர் என ஏய்த்து விற்பதற்கோ முடியாது. இந்த மசோதா இந்தியா சட்டசபையில் நிறைவேற்றப் பெற்றமையினாலேயே கதருக்குப் பாதுகாப்பு ஏற்பட்டு விட்டதாகக் கூறுவதற்கில்லை. இம்மசோதா இந்தியா முழுதிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டாலொழிய அதனால் பயனொன்றும் விளையப் போவதில்லை. அவ்வாறு செய்வதற்கு ஆங்காங்குள்ள மாகாண சர்க்கார்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் அவை உறங்கினால்..........

**தேளுக்கு மணியம் கிடைத்தால்!**

சாதாரணமாய்த் தேள்கள் கொடுக்கைத் தூக்கிய வண்ணமே போகும். எதிரே தட்டுப்படும் வஸ்துக்கள் எதுவாயிருப்பினும் அதைக் கொட்டாமல் அப்புறம் நகர்வதில்லை. சிட்டகாங், மிதுனபுரி ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளின் செய்கை இதற்குக் கொஞ்சமும் இளைத்ததாகத் தெரியவில்லை. விநாடிக்கு விநாடி வேறுவேறு உத்தரவுகள் பறந்துகொண்டே இருக்கின்றன. மனஞ்சலித்தாலும் உத்தரவு போடுதற்கு அவர்கள் கை சலிப்பதில்லை என்றே தெரிகிறது. உத்தரவுகளோ நாம்



இதுவரை கேட்டிராத அவ்வளவு விசித்திரம் வாய்ந்தவை. 'மாலை 6-மணிக்குமேல் இந்துக்கள் வெளியில் வரக்கூடாது; ஒரு நாள் முழுதும் மாணவர்கள் வீட்டை விட்டு வெளியில் தலைகாட்டக் கூடாது; பாடசாலைகள் அடுத்த உத்தரவு வரை மூடப்பட வேண்டும்; பரீட்சைகளை ஒரு மாதத்திற்கு ஒத்திப் போட்டுக்கொள்ளுங்கள். உங்கள் அக்கிரமத்திற்காக வைத்த தண்டபோலீசுக்குப் பணம் எண்ணிவையுங்கள். ஊருக்கு விதித்த அபராதத்தை 1½-மணி நேரத்திற்குள் செலுத்திவிட வேண்டும்' என்று என்னென்னமோ உத்தரவுகள் வந்து கொண்டே இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும் விட விநோதமான உத்தரவுகள் இப்பொழுது வெளிவந்துள்ளன.

ராணுவப்படை ஊர்வலம் வருமாயின் கைகட்டி, வாய் பொத்தி, ஓடி வந்து அதை ஒவ்வொருவரும் உபசரிக்க வேண்டுமாம். 'யூனியன் ஜாக்' கொடி எங்கேயாவது பறப்பதைப் பார்த்தால் உடனே ஓடிப்போய் வணக்கஞ் செய்ய வேண்டுமாம். இவை, உலகமுழுதிலும் தேடினும் வெளிவந்திராத ஓர் அற்புத உத்தரவு என்பதில் சந்தேகமில்லை. இவ்வுத்தரவுகளுக்குக் கீழ்ப்படியுமாறு பொதுஜனங்கள் வற்புறுத்தப்படுவது எல்லாவற்றினும் விந்தையாகும்

**பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்டது**

இந்துலாவின்படி பெண்களுக்கு யாதொரு உரிமையும் கிடையாது. அதனால், பெண்சமூகம் பல துன்பங்களை அனுபவிக்க நேர்கிறது. ஆண் சந்ததியில்லாது புருடன் இறந்து விட்டால் மனைவி ஜீவனோபாயத்திற்கே வகை யின்றித் தயங்க வேண்டியவளே. புருடன் சொத்தில் அவளுக்கு யாதொரு சொந்தமும் கிடையாது. அத்துடன் இரண்டொரு பெண் குழந்தையும் இருக்குமாயின் அவற்றைப் பராமரித்துக் கல்யாணஞ் செய்யும் பொருப்பு முற்றும் அவளையே சார்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவளது மனோநிலை எவ்வாறிருக்குமென நாம் சற்று ஊகித்துப் பார்க்க வேண்டும். இத்துடன் அவளது தாய் வீட்டில் அண்ணன் தம்பியர் சிறிது லோபத்தன முடையவராயிருப்பின், அந்தோ, பரிதாபம், அவள் பெண் குழந்தைகளுடன் நாடோடியாய்த் திரிந்து அலைய வேண்டியதே. இவைகளுக்கெல்லாம் பரோடா சமஸ்தானம் பரிகாரம் தேடிவிட்டது. இந்த சமஸ்தானம் சொத்துரிமை பற்றி ஒரு சட்டம் நிறைவேற்றி யிருக்கிறது. அதன்படி 'பாகமாகாத ஒரு குடும்பத்தில் ஆடவன் இறந்து விட்டால், அவனுடைய சொத்துக்கு அவனது மனைவியே சொந்தக்காரி. சட்டப்படி புருஷனுக்குக் கிடைக்கக் கூடிய சொத்தைத் தரும்படி

குடும்பத் தலைவனைக் கேட்க அவளுக்கு அதிகாரம் உண்டு. புருடன் வீட்டினர் ஏழையாகவும் அவளைக் காப்பாற்றும் சக்தியற்றவராகவும் இருந்து, தகப்பன் வீட்டினர் சற்று சௌகரியம் உடையவராய்க் காணப்படின் அவளுக்குத் தகப்பன் சொத்தில் ஜீவனாம்சம் பெற உரிமை யுண்டு. தகப்பன் சொத்தில் பிள்ளைகளுக்குக் கிடைக்கக் கூடிய பாகத்தில் நான்கிலொரு பங்கு சொத்து, கல்யாண மாகாத பெண்கள் பெறுதற்கு உரியராவர்.

இந்தச் சட்டம் மிக முற்போக் குடையதும், அவசியமாய் வேண்டப்படுவதுமாகும். இதனை நிறைவேற்றிய பரோடா சமஸ்தானத்தைப் போற்றுகிறோம்.

---

## மதிப்புரை

### கலியுகப் பிரகலாதன்

இப்பெயர் புனைந்த நூலொன்று வரப்பெற்றோம். இது சென்னை, ஜீவ ரக்ஷா பிரசார சபையாரால் வெளியிடப் பெற்றது. இந் நூல் கடவுள் பெயரால் நிகழ்த்தப் பெறும் கொலைகட்குக் காரணராவார் யார்? உண்மையில் உயிர்ப் பலியினைப் பெற தெய்வங்கள் அவாவுகின்றனவா? அப் பலியிடும் கொடிய வழக்கத்தினை ஒழித்துவிடுவோர்க்குத் துன்பம் நேர்வது உண்மையா? ஆயிரக் கணக்கான சிறு தெய்வங்கள் எவரால் படைக்கப்பட்டன? இப்போலிக் கற்பனைத் தெய்வங்கட்கு மெய்ம்மையும் சிறப்பும் கற்பிப்பதற்காகவும், செல்வந்தர்களை தம் வயப்படுத்துவதற்காகவும் குடிகாரப் பூசாரிகள் உபயோகப்படுத்தும் தந்திரங்கள் யாவை? என்பன போன்ற விஷயங்களை தெள்ளத் தெளிய விளக்குகின்றது. நாடக ரூபமாக இயற்றப் பெற்றுள்ள இந் நூல் பெரிதும் பள்ளி மாணவர்கள் நடிப்புக்கு ஏற்றதாகும். அதிலும், பாடசாலையிற் பயிற்சி பெறும் சிறுவன் சிவநேசன் இந்நாடகத் தலைவனாய் அமையப் பெற்றிருப்பது மாணவர்கள் நடிப்புக்கு மிகப் பொருத்தமானதெனக் கூறவேண்டுவதில்லை.

இந் நாடகம் ஆங்காங்கு நடித்துக் காட்டப்படுமாயின் பாமரர்களாயினும் அவர்கள் சிறு தெய்வங்களின் போலித் தன்மையினையும், பூசாரிகளின் அடாத செயல்களையும் நன்கு உணர்வர்; ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும் என்ற சீரிய கொள்கையினைப் பெறுவர்; உயிர்ப் பலியினை அற நீக்கி, தன்னுயிர் போல் மன்னுயிரைப் பேணும் செவ்விய ஒழுக்கமெய்துவர்.

இந் நூலாசிரியராகிய ஸ்ரீ, T. S. ஸ்ரீபால் என்பவரை இளமை முதல் நாம் அறிவோம். ஒரு சாலை மாணுக்கராய் பள்ளியில் ஒன்றாய்ப் பயின்ற அஞ்ஞான்றே அவரது சிறந்த அறிவு பிற்காலத்தில் பலருக்குப் பயன்படுமென யாம் எண்ணியதுண்டு. அவ் வெண்ணம் இன்று நிறைவேறியமை கண்டு மகிழ்ச்சி யடைகிறோம். இந் நூலை அனைவரும் வாங்கி, நடித்து சீர்திருத்தத்திற்கு ஆக்கமளிக்குமாறு பொது மக்களை வேண்டுகிறோம்.

இதன் விலை அணு 8

கிடைக்குமிடம்: தென்னிந்திய ஜீவ ரக்ஷா பிரசார சபை
436, தங்கசாலை வீதி, சென்னை.



# மானஸிக தபால்

[மாவன்னா]

ம-ள-ள-ஸ்ரீ டெபுடி இனிஸ்பெக்டர் துரை அவர்களுக்கு

கொத்தம்பேடு டீசர் மானேஜர் சித்தையா தண்டனு சமர்ப்பித்து எழுதிக்கொள்ளும் சேதி. ஒங்க ஆபீசிலிருந்து இன்னைக்கி ஒரு கடுதாசி எனக்கு கெடச்சிது. அதுலே, எம் பள்ளிக்கூடத்தெ பரீச்செ செய்ய மார்ச்சு மாசம் மூணாவது வாரத்திலே நீங்க வரப் போறீங்கண்ணு எழுதி யிருந்தது. நீங்க இந்தச் சர்க்கிளுக்கு புதிசாக வந்தவுங்க. ஒங்களுக்கு இந்தப் பக்கத்து விஷயம் சரியாக தெரியாதுன்னு நெனைக்கிறேன். இந்தக் கடுதாசியெ கொஞ்சம் கவனமா படிச்சி பாருங்கோ. ரகசியமா யிருக்கணும்னு கேட்டுக்கொள்றேன்.

இந்த சர்க்கிளில் எத்தனையோ பள்ளிக்கூடம் இருக்குதுங்க. அதுலே முன்னிருந்த இனிஸ்பெக்டர் ஐயாவுங்கோ நாலஞ்சு பள்ளிக்கூடத்துக்கு வர்ரதே கிடையாதுங்க. எங்களெ ஒரு நாளக்கி அவுங்க வூட்டுக்கு வரச்சொல்லுவாங்க. நாங்க ரிஜிஸ்தரு கிஜிஸ்தரு எல்லா கொண்டுபோவோம். கையெழுத்து போட்டுடுவாங்க. கொஞ்சங் கூட அவுங்களுக்கு கஸ்டமே கிடையாதுங்க. எங்க ஊருக்கு வர்ரதின்னு எம்மாத்திரம் கஸ்டந் தெரியுமா. நல்ல கல்லு பாதெ கெடையாது. கயனிகட்டுலே நடந்து வரணும். முள்ளு கல்லு கெடக்கும். அம்புட்டு கஸ்டபட்டு துரை அவுங்க என் வரணும். ஒரு கார்டு போட்டிருந்தா நான் எல்லா கொண்டுகிட்டு வந்துபூடுவேன். நீங்க புதிசு. ஒங்களுக்கு ஒன்னும் தெரியாது. பரீச்சைக்கு வர்ரேனுன்னு கடுதாசி எழுதிபூட்டிங்க. அதுவும் பரவாயில்லெ. என்னைக்கி, எத்தனை மணிக்கி வர்ரீங்கன்னு எழுதி யிருந்தா நன்னா யிருக்கும். அதுவுமில்லெ. மூணாவது வாரமின்னு குறிச்சி போட்டிங்க. இப்படி செய்தா ஏளைங்கோ எப்படி பொளைக்கிறது.

எம் பள்ளிக்கூடத்திலெ நான்தான் எட்மாஸ்டரு. எம் மூத்த மவன் ஒரு வாத்தியாரு. இரண்டாங் கிளாசு பாத்துகிறான். எம் பெண்சாதி முதல் கிளாசு கொளந்திங்களுக்கு வாத்தியாரு. எனக்கு இன்னும் இரண்டு ஆம்பளே பசங்களு, மூணு பொம்பளே பசங்களும் இருக்கிறாங்க. எல்லாரும் பள்ளிக்கூடத்தெ நம்பி காலங் களிக்கிறோம், ஒங்க தயவு இல்லாக்கட்டி நாங்க எப்படி ஜீவிக்கிறது.

எம் பொஞ்சாதி பள்ளிக்கூடத்தெ பாக்கனும்; ஊட்டு வேலே செய்யனும்; சமச்சி போடனும்; கொளந்தெ குட்டியெ பாக்க னும. பெரியமவன் நெலம்பொலம் பாத்துகனும். நாந்தான் நொண்டி. எங்கியும் போவமாட்டேன். இங்கே பள்ளிக்கூடத்திலேயே குந்திங் கெடப்பேன். நீங்க திடீலின்னு வந்தாக்கா என்ன பண்றது.

இன்னும் இந்த ஊருலே பசங்க சரியா வரமாட்டாங்க. கட லக்கா புடுங்க அப்பப்பொ நின்னுபூடுவாங்க. இது சின்ன பட்டிக் காட்டு ஊரு. வூட்டுலெ கொளந்தெக்கி ஒடம்பு நன்னா இல்லாபுட்டா அதை வச்சிக்கிறதுக்கு பசங்களெ நிறுத்தி பூடுவாங்க. அம்மாசெ, கிருத்திகெ, மாரியம்மா திருணா, பிடாரி பொங்கல் இதுக்கெல்லாம் பசங்க வரமாட்டாங்க. இது தெரியாமெ நீங்க வந்துட்டா என்ன பண்றதுன்னுதா இந்தக் கடுதாசி எளுதிபோட்டேன். வர்ர நேரத்தே முன்னாடி தெரிவிச்சிபுட்டா பசங்களெ ஒன்றுவிடாமெ எம்புட்டு கஸ்டப்பட்டாவது தேடி புடிச்சிகினு வந்துட்ரேன்: எம்மவனும் பெண்சாதியும் பள்ளிக்கூடத்திலேயே இருக்கச் செய்யரேன். அய்யா வுங்க கொஞ்சம் பெரிய மனசு பண்ணனும். இதெ மாத்திரம் தெரி விச்சி போடனும். எப்பவு மறக்கமாட்டோம். நாங்க செய்யக் கூடிய ஒபகாரத்தெ எப்பவும் வழக்கம்போல செய்ய காத்துங் கெடக் கிரோம். அதெப்பத்தி கொஞ்சங்கூட சந்தேகப்பட வேண்டிய தில்லே. நாங்க மோசங்கீசம் பண்ணமாட்டோம். கஸ்டத்தெ ஐயா வுண்டே சொல்லி கெஞ்சிக் கேட்டுக்கொள்ரோம். நீங்க கொஞ்சம் கைகாட்டினா எங்கோ பிளச்சி பூடுவோம். தங்க கடாச்சந்தான் வேணும். இது பட்டிக்காடின்னாலும் நல்ல பசு நெய் ஏராளமா கெடைக்குமுங்கோ. உத்தரவு செய்தா கொண்டுகிட்டு வர்ரேனுங்க. எல்லாம் ஒங்க கடுதாசி பாத்துகினு அதும்படி செய்ய தாசன்தாச னின்னு காத்துங் கெடக்கிரோம்.

நானு வடக்கே இருந்து இங்கே வந்துகிரேன். தெலுங்கு நல்லா தெரியும். தமிளு அவ்வளவா தெரியாது. தப்பு கிப்பு இருந்தா மன்னிச்சிகினும். நீங்க இருக்கிற திக்கு நோக்கி தண்டம் போட ரேன்.

இப்படிக்கு,
சித்தையா.

---

சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென் பதைத் தெரிவித்துக் கொள்ளுகிரோம். (ப-ர்.

## அதிர் வெடி

இரண்டு கண்களும் தெரியாத பிரக்யாதி பெற்ற சங்கீத வித்வா னுடைய நடிப்பின் திறமை பார்க்கத் தக்கது.

—சினிமா விளம்பரம்.

இது குழந்தைகள் சினிமாவாக இருக்கலாம். குருடர்கள் சுவற் றில் மோதியும், பள்ளத்தில் விழுந்தும் கஷ்டப்படுவதைப் பார்த்தால் அவர்கள்பேரானந்தப்படுவது இயற்கை யல்லவா?

* * *

மனம் உருகும் காதலை யூட்டுவது 'சிரவன் ஏ' சிகரெட்டுகள்.

—ஓர் விளம்பரம்.

காதலைத் தரும் சிகரெட்டுகளும் இருக்கிறதென்பதை இப்போது தான் தெரிந்துகொண்டோம். கொக்கோகத்தைப் பறிமுதல் செய்த அரசாங்கம் இந்த சிகரெட்டுகளை ஏன் பறிமுதல் செய்யக் கூடாது.

* * *

பெருச்சாளி சாமியாருக்கு தண்டனை. சென்னை மாஜிஸ்டிரேட் தீர்ப்பு.

—செய்தித் தலைப்பு.

பக்தர்களே! ஜாக்கிரதை. நீங்கள் பூஜிக்கும் பெருச்சாளி சாமி யார்களெல்லாம் கோபித்துக்கொண்டு மாஜிஸ்டிரேட்டினிடம் சண் டை பிடிக்க ஓடிவிடப் போகின்றன.

* * *

ரூபா 1000 இனாம்.

—விளம்பரத் தலைப்பு.

முதல் வள்ளல்களின் அவதாரமா யிருக்கலாம். உடனே இனாம் தொகைக்கு முந்திக்கொள்ளுங்கள்.

* * *

கம்பர் ஊரில் கொள்ளை.

—செய்தித் தலைப்பு.

இந்தக் கொள்ளையில் ஸ்ரீ கம்பநாட்டாழ்வார் சிக்கி யிருக்க மாட்டாரென்றே நினைக்கிரோம்.

* * *

பசுபதி கோயிலில் அடிதடி.

—செய்தித் தலைப்பு.

கலியுக மல்லவா! அர்ச்சகர்கள், பசுபதியின் மனைவி மக்களுக்குள் ஏதேனும் கலகத்தை மூட்டி யிருக்கலாம்.

* * *

யுனைடெட் இந்தியா கம்பெனியில் பாலிஸி எடுத்துக்கொள்வதால் நீங்கள் இந்திய சாமான்களையே வாங்குகிறீர்கள்.

—இன்சியூரன்ஸ் விளம்பரம்.

இன்சியூரன்ஸ் பாலிஸி இந்திய சாமான் அல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம் என்று அவர்களே மற்றொரு விளம்பரம் வெளியிடுவது நலம்.

*　　*　　*

நீங்கள் அவசியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய இரண்டு வஸ்துக்கள்.

—வைத்திய விளம்பரம்.

எவரெஸ்டு மலை உச்சியைக் காண முயன்ற பைத்தியக்காரர்கள் இந்த இரண்டு வஸ்துக்களைத் தெரிந்துகொள்ள முதலில் பிரயத்தனம் செய்யாதது ஆச்சரியமாகவே இருக்கிறது.

*　　*　　*

ரயில், ரஸ்தா போட்டி.

—சட்டசபை வாதம்.

கடைசியில் இந்த ரன்னிங் ரேஸில் (ஓட்டப் பந்தயம்) ரஸ்தாவே ரயிலை ஜெயித்திருக்குமென நினைக்கிறோம்.

---

## நன்கொடை

சிலோன், கொளும்பு T. வேலுப்பிள்ளை அவர்கள், தமக்குக் கிடைத்த விகடத் துணுக்குப் பரிசை கல்வி நிதிக்கு வழங்கிய ரூ. 1-0-0.

M. V. P. சின்னசாமி முதலியார் வசூலித் தனுப்பியது சிலோன், ஹட்டன் கமுகவத்தைத் தோட்டம் சி. அங்கப்ப முதலியார் குமாரன் இரத்தினவேல் முதலியாருக்கும், ப. இராமசாமி முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி சின்னையம்மாளுக்கும் 4-2-34-ல் நடந்த திருமணத்தின்போது சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0.

ஷை ஊர் க. அங்கப்ப முதலியார் குமாரன் மாரிமுத்து முதலியாருக்கும் வி. வெங்கடாசல முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி அங்கம்மாளுக்கும் 4-2-34-ல் நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0.

ஷை இரண்டு திருமணங்களிலும் குருதட்சிணையாக வழங்கியது. ரூ. 2-8-0.

இவர்களனைவரும் சேலம் ஜில்லா திருச்செங்கோட்டிலிருந்து சென்றுள்ளவர்களாவர்.

சங்கர நயினார் கோவில் ஜவுளி வியாபாரி மா. ப. வைரவ முதலியார் அவர்கள் தாம் செய்யும் வியாபாரத்தில் கிடைத்த மகிமைப் பணத்தை வழங்கிய ரூ. 5-0-0.

இவர்களனைவருக்கும் சங்கத்தின் நன்றி உரியதாகுக.

---

## சமர்ப்பயாமி

“மாற்றுருவத்தில் தோன்றிய மித்திரன் பல வகையாலும் வாசகர்கட்கு இன்பமூட்டி வருகின்றான். இதுவரை நமது மித்திரனை வரவழைக்காதவர்களையெல்லாம் இனி நாங்கள் வற்புறுத்தி சந்தாதாரர்களாய்ச் சேர்க்க முடியுமென நினைக்கிறோம். புதிதாகப் பலரைச் சேர்த்துக்கொண்டு வருகிறோம்’ என்று சிலர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மற்றும் சிலர் அநேக புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணத்துடன் அனுப்பியிருக்கிறார்கள். இத்தகைய குலாபிமானச் செல்வர்களனைவருக்கும் நமது கனிந்த நன்றி உரியதாகுக. நன்றியை மட்டும் காட்டுவதோடமையாது இவர்களனைவருக்கும் பிரதியுபகாரம் செய்ய வேண்டுமென மித்திரன் அடிக்கடி வற்புறுத்துகிறான். எனவே, அவன் விருப்பத்திற்கிணங்கவும், உங்களுக்கு மனோ எழுச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டவும் கருதி புதிய ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறோம், அதன்படி, 5 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து ஒரு வருட முன் பணத்துடன் அனுப்புவோருக்கு ஓராண்டு மித்திரன் இனாமாக அனுப்பிவைக்கப்படும். எனவே, நீங்கள், உங்களூரிலுள்ள செங்குந்தரனைவருக்கும் மித்திரனது பெருமைகளை எடுத்துக் கூறி, அவர்களைச் சந்தாதாரர்களாய்ச் சேர்த்து உபகரித்து, மித்திரனது எளிய கைம்மாறினைப் பயன்படுத்திக்கொள்வதோடு அவன் வளர்ச்சிக்கும் ஆக்கத்திற்கும் உறுதுணையாக நிற்குமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

*　　*　　*

இரண்டு மாதங்கள் மட்டும் போட்டிப் பந்தயம் வெளியிட்டுப் பின்பு நிறுத்திவிட்டது வாசகர்கள் அறிந்ததே. அதை விடாமல் மாதந்தோறும் தொடர்ந்து வெளியிட வேண்டுமென தினந்தோறும் கடிதங்கள் கிடைத்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் சில, மிக முக்கியமான, சமூக முன்னேற்றக் கிளர்ச்சியில் அளவு கடந்த ஆர்வமுடைய அன்பர்களிடத்திலிருந்து வந்தனவாகும். இவர்களனைவரது அவாவினையும் அடியோடு புறக்கணிப்பதற்கில்லை. எனவே, அடுத்த மாத முதல் பிரதி இதழிலும் போட்டிப் பந்தயம் வெளியிடுவதென்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது, இவைகளுக்குப் பிரவேசக் கட்டணம் யாதொன்றும் கிடையாது. வாசகர்களனைவரும் இதனை பயன்படுத்திக்கொள்ளுவார்களெனக் கருதுகிறோம்.

---

### பத்திரிகைகளின் வரவு

| | | |
|---|---|---|
| இந்தியத் தாய் | தமிழரசு | குமார விகடன் |
| இந்திய விவசாயம் | பொன் மலர் | விஜய பாஸ்கரன் |
| வர்த்தக ஊழியன் | ஆதிரை | குறும்பன் |
| நகர தூதன் | சச்சிதானந்தம் | பிரதாப விகடன் |
| புரட்சி | சுகாபிவிருத்தினி | பிரசண்ட மாருதம் |
| முன்னேற்றம் | ஜீவரக்ஷகன் | ஜகன் மோகினி |
| தன வணிகன் | பால விநோதினி | சன்மார்க்கன் |
| ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் | மாதர் போதினி | குலால மித்திரன் |
| | ஆனந்த போதினி | இராஜ குல தீபிகை |
| கலைமகள் | சிர்கருணீக விஜயம் | |

## உத்திரன்மேரூர் தேவார பக்தஜன சபை

இவ்வாண்டு சிவராத்திரியன்று ஷை சபையின் ஆதரவில் அதன் தலைவரும், செங்கற்பட்டு ஜில்லா போர்டு அங்கத்தினருமாகிய திரு. V. M. துரைசாமி முதலியார் அவர்கள் நன்முயற்சியால் ஷை யூர் செங்குந்தர்களின் உதவிகொண்டு சுமார் 1000 பேர்வரையில் உணவளிக்கப் பெற்றார்கள். இத்தேவாரசபை சென்ற 30 வருஷங்களாகச் செவ்வனே நடைபெற்று வருகின்றது என்று கேட்டு சந்தோஷப்படுகிறேன். உத்திரன்மேரூரில் சில வருஷங்களுக்கு முன்னிருந்த பிடிவாதமான கக்ஷிப்பிளவு ஒழிந்ததற்கு திரு. முதலியார் அவர்களே காரணமாவர். மேலும் நம்மவர்களுக்குள் இனியும் கக்ஷி உண்டாகாதிருப்பதற்குச் செய்யவேண்டிய முயற்சிகள் அனைத்தையும் கண்ணுங் கருத்துமாய்ச் செய்து வருகிறார். ஆகவே, இனி உத்திரன்மேரூரில் கக்ஷிப்பிளவு தலைகாட்டாதென்றே எதிர்பார்க்கப்படுகிறது. திரு. துரைசாமி முதலியார் அவர்களது பரந்த நோக்கமும், பொதுஜன சேவை ஊக்கமும் அவர் ஜில்லா போர்டு அங்கத்தினரான காலத்திலிருந்து நன்கு புலனாகிறது.

ஷை சபையில் பயின்று தேர்ச்சிபெற்ற பல வணிக நண்பர்கள் 'வணிக வைசிய தேவார பக்தஜனசபை' என்ற ஒருசபை நிறுவி, பெருந்தனம் திரட்டித் தாய்ச் சபையைப்போல் அதற்கென ஒரு தனி கட்டடத்தையும் ஏற்படுத்தி வெகுவிமரிசையாக நடத்தி வருகிறார்கள். இந்த சபைக்கும் நமது, துரைசாமி முதலியார் அவர்களே தலைவராக இருந்து வருகிறார்கள். அன்றியும், உத்திரன்மேரூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வரும் குஷ்ட நோயாளிகளுக்கு உணவளிக்கும் பொருட்டு மூலதனம் திரட்டி வைக்கவேண்டிய முயற்சியிலும் இவர் முதன்மையாக இருந்து செய்துவருகிறார். இவற்றால் திரு. முதலியார் அவர்கள் உள்ளத்தில் குலாபிமானமேயன்றி, கடவுள் பக்தி தேசாபிமானம் முதலிய பல நற்குணங்கள் நிறைந்திருக்கின்றன என்பது தெற்றென விளங்குகிறது.

ஆகவே இத்தகையார், நமது தலைச் சங்கத்தார் மாத்திரம் சிறிது முயற்சி எடுத்துக்கொள்வார்களாயின், உத்திரன்மேரூர் செங்குந்தர் சங்கத்திற்குப் புத்துயிரளித்து, அதனை முதற்றரமான கிளைச் சங்கங்களுள் ஒன்றாக்கி, அதன் மூலம் உள்ளூரிலும், சுற்றுப் பக்கங்களிலும் அவ்வப்போது நடைபெறும் கல்யாணம் முதலிய சமயங்களில் நன்கொடை வசூலித்து தலைச் சங்கத்திற்கனுப்பி, நமது திருவாரூர் மகாநாட்டின் பிரதான தீர்மானத்தை நடவடிக்கைக்குக் கொண்டுவராமலிருக்கமாட்டாரெனச் சொல்லவும் வேண்டுமோ?

அடுத்த தேர்தல்களில் உத்திரன்மேரூராரும் மற்ற ஊராரும் ஒற்றுமையாயிருந்து திரு. V. M. துரைசாமி முதலியார் அவர்களையே போட்டியின்றி ஜில்லா போர்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்து உற்சாகப்படுத்தி; இன்னும் பல நன்மைகளைச் செய்யும்படித் தூண்டுவார்களென எதிர்பார்க்கிறேன்.

ஒரு நிருபர்

---

# அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்!

### மனிதன் வயிற்றில் முத்து

நார்வேயில் ஒரு டாக்டர் ஒரு நோயாளிக்குக் குடல் கோளாறு இருந்தபடியால் ஆபரேஷன் செய்தார். குடலில், மூத்திரப் பையினருகில் சிறு முத்துக்கள் பல இருக்கக் கண்டார். அந்த முத்துக்கள் நல்ல ஒளியும், பளபளப்பும் உடையனவாய் உருண்டை வடிவில் இருந்தனவாம். இந்த முத்துக்கள் மனிதன் வயிற்றில் எப்படி உற்பத்தியாயின என்பது தெரியாமல் டாக்டர் ஆச்சரியப்படுகிறாராம்.

### தோட்டதெல்லாம் சாம்பலா?

சீனாவில், போலோ பிரதேசத்தில் ஸ்ரீமதி, வி. குவோ ஜீ என்பவள் நான்கு முறை விவாகம் செய்துகொண்டும் விவாகமான சிறிது நேரத்தில் கணவர்கள் மாண்டனர். எனவே பரிகாரமாக ஐந்தாவது முறை அப்பெண் தனது வீட்டினருகிலுள்ள 100 வயதான ஒரு மாமரத்தை மணந்துகொண்டாள். இரு தினங்களில் புயல் காற்றினால் அம் மரம் முறிந்து விழுந்ததாம். மரத்துக்குச் சொந்தக்காரர் அப் பெண்மீது நஷ்ட ஈடு வழக்கு தொடர்ந்திருக்கிறாராம். அப் பெண் மணந்ததனாலேயே மரம் முறிந்ததென அவர் பிராதில் கூறியிருக்கிறாராம்.

### ஆண்களைத் தின்னும் பேய்கள்

பசிபிக் மகா சமுத்திரத்தில் பௌசிபோ என்னும் தீவு இருக்கிறது. இந்தத் தீவில் ஆடவர்களே இல்லை. எல்லாம் பெண் அரக்கிகளே வசிக்கிறார்கள். இவர்கள் கையில் ஆடவர்கள் சிக்கினால் அவர்களைப் பிடித்துக் கொன்று புசித்துவிடுகிறார்களாம்.

### திருமண அரசிகள்

அல்போனியா தேசத்துப் பெண்களுக்கு கல்யாணம் நிச்சயிக்கப்பட்டதும் ஒரு சிம்மாசனம் இட்டு அதில் கல்யாணப் பெண்ணை அரசிகளாகப் பாவித்து உட்காரவைக்கின்றனர். பெண்ணின் உறவினரும் நண்பர்களும் அப் பெண்ணுக்கு வணக்கம் செய்து சன்மானம் செய்வது வழக்கமாம்.

### மரத் தூளிலிருந்து பட்டும், சர்க்கரையும், கண்ணாடியும்

மரங்களால் அநேக உபயோகங்கள் இருக்கின்றன வென்பது தெரிந்ததாயினும் மரத் தூளில் அதிக பலனுண்டு என எவரும் இது வரை நினைத்ததில்லை. ஜெர்மனியில் மரத் தூளிலிருந்து இப்போது சர்க்கரை செய்து வருகிறார்கள். அதற்கென பெரிய கைத்தொழிற் சாலையும் கட்டி இருக்கிறார்கள். கலிபோர்னியாவில் மரத் தூளை குழம்பாக்கி சிறு நூலாகத் திரித்து சாயமேற்றி உயர்ந்த பட்டு [illegible]

கச் செய்கிறார்கள். இந்தத் தாளிலிருந்தே இப்போது பல தேசங்களில் காகிதம் செய்துவருகிறார்கள். மரத் தாளிலிருந்து மேனாடுகளில் மிருகங்களுக்கு ஆகாரம் தயாரிக்கிறார்கள். மரத் தாள் பல சாமான்கள் கெட்டுப்போகாதபடி பாதுகாப்பதற்கு உபயோகப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் மரத் தாள் உபயோகத்தில் மிக்க அதிசயம் யாதெனில் அதிலிருந்து கண்ணாடிகள் செய்வதேயாகும். இந்தக் கண்ணாடிகள் சாதாரண கண்ணாடிகளைவிட உறுதியுடையவைகளாகும்.

### பெண்ணுக்கு அடங்கும் புருஷர்கள்

திபேத் தேசத்தில் பெண்களின் நடை யுடை பாவனைகள் மிக விசித்திரமானவை. இங்கு ஆடவர்கள் உள்ள நிலையில் அங்கு பெண்கள் இருக்கிறார்கள். வயல் வேலை முதல் எல்லாவற்றையும் பெண்களே செய்கிறார்கள். பெண்களை எதிர்பார்த்தே அநேக ஆடவர்கள் அங்கு ஜீவிக்கிறார்கள். புருடன், மனைவிக்குப் பயந்து வாழ்க்கை நடத்துகிறான். மனைவிகளிடம் அதிக பக்தியும் மரியாதையும் காட்டி வாழ்கிறார்கள். ஒரே தடவையில் ஒரு பெண் மூன்றுக்கு மேற்பட்ட புருடனை மணந்துகொள்வதே வழக்கமாயிருக்கிறதாம்.

### தேச பக்தர்களின் மலிவு

அரேபியாவில் ஒரு புதிய உத்தரவு வெளி வந்திருக்கிறது. அதன்படி ஒரு பொன் அரசாங்கத்திற்குக் கொடுப்போருக்கெல்லாம் தேச பக்தர் என்ற பட்டமும், 2 பொன் கொடுப்போருக்கு பெரிய தேச பக்தர் என்ற பட்டமும், 4 பொன் கொடுப்போருக்கு மகா பெரிய தேச பக்தர் என்ற பட்டமும் வழங்கப்படுமாம்.

### வெள்ளை மயிருக்கு 16 ரூபாய்

இந்தியாவில் ஆடவரும் பெண்டிரும் வெள்ளை மயிரை வெறுக்கிறார்கள். இங்கிலாந்தில் அநேக பெண்கள் கறுப்பான மயிரை சாயமேற்றி வெள்ளை யாக்கிக்கொள்ளுகிறார்கள். ஒரு பெண் தனது கறுத்த மயிருக்கு வெள்ளைச் சாயம் ஏற்றுவதற்கு வாரம் ஒன்றுக்கு 21 ஷில்லிங் அதாவது 16 ரூபாய் செலவு செய்கிறாளாம்.

### சித்திரக் குள்ளன்

உலகிலேயே அதிக குள்ளமானவர் துருக்கியிலுள்ள ஹமீடு புசய்ன்பே என்பவராவர். இவருக்கு வயது 36 ஆகியும் 14 அங்குலம் அதாவது $1\frac{1}{4}$ அடி உயரமே இருக்கிறாராம்.

### குதிரைக்கு மீன் ஆகாரம்

போலண்டு சர்க்கார் ராணுவக் குதிரைகளுக்கு ஒரு வித மீன்களை ஆகாரமாகக் கொடுக்கின்றனராம்.

### சிப்பிகளின் அதிசயம்

கடலில் முத்துச் சிப்பிகளெல்லாம் பிறக்கும்போது பெண்களாகவே பிறக்கின்றன. பிறந்து சொற்ப காலம் கழித்து ஆண்களாக



மாறிவிடுகின்றன. சுமார் 2 வருடங்கள் ஆண்களாக இருந்த பின் மீண்டும் பெண்களாக மாறிவிடுகின்றன. இதன் காரணத்தை எந்த டாக்டராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

### பச்சைக் கல் ஆலயம்

நியூயார்க்கில் நடக்கும் உலகப் பொருட்காட்சிக்கு சீனாவிலிருந்து பச்சைக் கல் புத்த ஆலயம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இது 8 டன் நிறையுள்ள ஒரே பச்சைக் கல்லினால் செய்யப்பட்டது. இதை செய்து முடிக்க 150 சீன சிற்பிகள் 14 வருடம் வேலை செய்ய நேர்ந்ததாம்.

### 8 அடி நீளமுள்ள மீசை

உலகிலேயே அதிக நீளமான மீசை உடையவர் ஸ்ரீ தேஜூர் அர்ஜுன தாங்கல் என்னும் இந்தியர். இவரது மீசை 8 அடி நீளம் இருக்கிறது. தனது மீசையின் அழகையும் நீளத்தையும் வெளிப்படுத்த இவர் சிக்காகோவில் நடந்த உலகப் பொருட் காட்சிக்குச் சென்றிருக்கிறார்.

### 13 மைல் உயரம் பறந்து இறந்தனர்

‘ஸ்டிரா டோஸ்டாட்’ என்ற புகைக் கூண்டில் 3 பேர் ஏறிக்கொண்டு ருஷ்யாவில் ஆகாயத்தில் பறந்தனர். காலை 9 மணிக்குப் புறப்பட்டு $11\frac{3}{4}$ மணிக்குள் 13 மைல் உயரம் ஏறிவிட்டனர். ஆனால் இறங்கும்போது மூவரும் விபத்துக்குள்ளாகி உருத் தெரியாது சிதறுண்டு விழுந்தனர்.

### இழந்த கண்ணை 27 வருடம் கழித்துப் பெற்றான்

இரண்டாம் வயதில் வைசூரியால் கண் குருடான ஒருவன் இப்போது தனது 29-ம் வயதில் கண் சிகிச்சை செய்துகொண்டான். லண்டன் கண் ஆஸ்பத்திரியில் வேறு இரண்டு குருடர்களின் கண்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கரு விழியின் மேல் தோலை இவனது கண்ணில் வைத்துத் தைத்ததனால் இவனுக்குப் பார்வை ஏற்பட்டுவிட்டதாம்.

## ஒரு ரூபாய் பரிசு

ஒவ்வொரு மாதத்திலும் வெளியிடப்பெறும் அன்பர்களது விகடத் துணுக்குகளில் சிறந்த ஒன்றுக்கு ஒரு ரூபாய்பரிசு அளிக்கப்படும். ஏற்றுக் கொள்ளப் பெற்ற இதர விகடங்கள் அவரவர் பெயருடன் வெளியிடப்படும். எந்த தமிழ்ப் பத்திரிகையிலேனும் இதற்கு முன்பு, வெளியாயுள்ள துணுக்குகளை எழுதியனுப்பாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். கவரின் மேல்பக்கத்தில் ‘விகடத்துணுக்கு’ என்று கவனமாய்க் குறிப்பிடுங்கள். (ப-ர்.)

# வைத்தியப் பகுதி

மிஸஸ் டாக்டர், கண்ணுசாமி (சுந்தரத்தம்மாள்) திருவாரூர்

## கடி விஷங்கள்

(சென்ற இதழ் 103-ம் பக்கத் தொடர்ச்சி)

7. உச்சீ லிங்கத் தேள்கடி :—இது பகல் நேரத்தில் மட்டும் கொட்டும். இரவு காலங்களில் கொட்டுவது இல்லை. இது கொட்டினால் வீக்கம் உண்டாகும். அதிகமான சீதளம் காணும். வேதனை மிகுதியினால் நரம்புகள் படபடவென அடித்துக் கொள்ளும்.

8. நண்டு வாய்க்காலி :—தேளில், இது ஒருவகைப் பெருந்தேள். கொட்டினால் அதிகமான கடுப்பும் எரிச்சலும் உண்டாகும். வியர்வை வடியும். சீதளம் அதிகமாய்க்காணும். வாயால் நுரை தள்ளும்.

கிருஷ்ண எலி :—இது கடித்தால் இரத்தவாந்தி யுண்டாகும்.

கபில எலி :—இது கடித்தால் கண்டு கண்டாய் தழும்பு தோன்றிப் பின் இரணம் உண்டாகும். சுரம், வாந்தி, மயக்கம் உண்டாகும்.

லாலஜ எலி :—இதன் கடியினால் வாந்தியும் மூர்ச்சையும் ஏற்படும். வாயால் நீர்வடியும்.

கோகில எலி :—இதன் கடியினால் உடம்பில் கிரந்தி போன்ற புண் உண்டாகும். சுரம் தோன்றும். அடிக்கடி தாகம் எடுக்கும்.

தூங்கெலி :—இது கடித்தால் கடிவாயில் வீக்கம் தோன்றும். மார்பு வரண்டுவிடும். சதா தூக்கம் உண்டாகும்.

சூநக எலி :—இது கடித்தால் உடல்முழுதும் சிவந்த மச்சங்கள் உண்டாகும். நோய் அதிகமாக இருக்கும்.

அசதீ எலி :—இது கடித்தால் மார்பு வலி அதிகமாகும். தேகம் கருத்து விடும். அசதியும் சோர்வும் அதிகப்படும். வாந்தி யுண்டாகும். மூர்ச்சை யாகிவிடுவர்.

## கெந்தகம்

கெந்தகம் சாதாரணமாக பூமியி லுற்பத்தியாகும் விளைவுச்சரக்கு. விலையில் மிக மலிவானது; ஒரு பலம் முக்காலணுவுக்குக் கிடைக்கும். இதன் குணமும் சக்தியும் அளவு கடந்தது. எழுதுவதற்கும் எளிதன்று. கெந்தகம் சக்தியின் அம்ஸம்: சுத்தியான கெந்தகம் மனுஷ்ய தேகத்திலுள்ள சகல வியாதியையும் நிவர்த்தி செய்வதிலும்



இரத்த சுத்தி செய்வதிலும் இணையற்ற மருந்தாகும். பால், மோர், பசு மூத்திரம், எருமைச் சாணியைக் கரைத்த தெளிவு நீர், மணத்தக்காளிச் சாறு, கொடிவேலி கஷாயம், கரும்புச் சாறு, வெங்காயச் சாறு, காடி, சுண்ணாம்புத் தெளிவு நீர், இளநீர், பூந்திக்கொட்டை கஷாயம் முதலியவைகளில் தனித்தனி பத்துப் பத்து முறை கெந்தகத்தை உருக்கிச் சாய்த்தால் சுத்தியாகிவிடும். பின்பு, நல்ல தண்ணீரில் போட்டுக் கொதிக்க விட்டுக் கழுவி எடுத்துலர்த்தி சரியிடை சீனுக் கற்கண்டும், பசுவின் நெய்யும் சேர்த்து அரைத்துக்கொண்டு காலை மாலை அரைக்கால் ரூபாய் அளவு சாப்பிட்டு மேலே பால் சாப்பிட்டு நல்ல ஆகாரங்களும் சாப்பிட்டு வந்தால் நாம் எதிர் பாராதபடி நோயெல்லாம் குணமாகிவிடும். இரத்தமும் சுத்தியாகும். நல்ல தேஜஸ் உண்டாகும் ; ஆயுள் விருத்தியாம். இது ரஸாயன மருந்து. இதை அனுபவித்தவர்கள் தங்க பஸ்பத்தையும் விரும்பமாட்டார்கள்.

## குடும்ப வைத்தியம்

பூவரசின் காயை இடித்து அதன் ரசத்தை எச்சில் தழும்புக்குத் தடவி வந்தால் அது குணமாகிவிடும்.

கலியாண முருங்கை மரத்தின் இலையை இடித்துச் சாறு பிழிந்து நெருப்புச் சுட்ட புண்ணின் மேல் தடவினால் எரிச்சல் நீங்கும். கொப்புளிக்காது.

கொறுக்காப்புளி இலையை நன்றாய் அரைத்து வெட்டுக் காயங்களுக்கு வைத்துக் கட்டினால் உடனே குணமாகும்.

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

# தமிழர் மாண்பு

(சென்ற இதழ், 98-ம் பக்கத் தொடர்ச்சி)

[A. S. முத்தைய முதலியார், பி. ஏ., திருவனந்தபுரம்]

(Rights Reserved)

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்ற, பொய்யாமொழிக் கிணங்க அரசர்கள் பண்டு ஆட்சிபுரிந்து வந்தார்கள். இத்தகைய நீதியால் அரசர்கள் வாழ, அக்காலத்து மக்கள் பலவித துறைகளில் மேம்பாடுற்று விளங்கினார்கள். நாடு வளத்தில் வனப்புற்றது. பலவிதமான கைத்தொழில்கள் நடைபெற்று வந்தன. விசித்திரமான பண்டங்கள் அமைக்கப்பெற்று அயல்நாட்டுக்கு அனுப்பப் பெற்று வந்தன.

பெருமை பெற்ற பேரரசர்களுக்குத் துணையாக ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் அமைந்திருந்தன. அரசியல் நடத்துவதற்கு அமைச்சர் குழு, புரோகிதர்குழு, தானைத்தலைவர்குழு, தூதுவர்குழு, ஒற்றர்குழு என்னும் ஐந்து பெரிய கூட்டங்கள் உதவியாக இருந்தன. இவர்கள் அன்றி கரணத்தியலவர், அரசனது ஆணையை நிறைவேற்றும் கருமவிதிகள், பண்டாரம் (பொக்கிஷம்) வகிப்போராகிய கனகச் சுற்றம், வாயில் காவலர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகிய இன்னோர்களும் துணைபுரிந்துவந்தார்கள். இவர்களும் அரசர்களுக்குக் கட்டுப்பட்டு நன்னெறியாகவே ஒழுகினார்கள். வழக்குகள் தீர்ப்பதற்கு அங்கங்கே நீதி மன்றங்கள் நிலைநிறுத்தப் பெற்றன. அவர்களும் அறநெறி தவறாது நீதி செலுத்தி வந்தார்கள்.

அரசர்கள் அரசாட்சியின் பெருமையால் சமயப் போராட்டமும், சண்டைசச்சரவு மின்றி ஜனங்கள் அமைதியாகக் காலம் கழித்தார்கள். "எம்மதமும் சம்மதம்" என்ற கொள்கை நிலவி வந்தது. முடி சார்ந்த மன்னர்களும் சமரசக் கொள்கை யுடையவர்களாகவே காணப்பட்டார்கள். சைவமதம், வைணவமதம், புத்தமதம், ஜைனமதம் முதலிய பலசமயங்கள் அக்காலத்தில் காணப்பட்டன. செங்குட்டுவனைப்பற்றிக் கூறுகின்ற அவனுடைய இளவல்-இளங்கோவடிகள், செங்குட்டுவனைச் சிவபிரான் அருளால் தோன்றியவன் என்று பாராட்டுகின்றார். பின்னொரு இடத்தில் மலை வளங் காணப்புறப்படும் சமயத்தில் சிவன்



கோவில் பிரசாதமும், விஷ்ணுகோயில் பிரசாதமும் அணிந்து கொண்டான் என்று கூறுகின்றார். இளங்கோவடிகளோ புத்த மதச் சார்புடையவர் என்பதற்கு அவர் நூலே சான்று பகர்கின்றது. இதனால் மதத்தில் பொது நோக்குடையவர்களாகவே அக்காலத்து மன்னர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது வெளிப்படை.

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ,"

*   *   *

"ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகி,"

இவ்வடிகளின் கருத்தைக் காண்க.

மன்னர் பெருமக்கள் மாண்புடன் வாழ்ந்துவந்த காலத்தில், மற்ற நாட்டாரோடு வாணிகம் நடந்து வந்தது. ஈஜிப்து, கிரீஸ், ரோம், பெர்ஷியா முதலிய இதர நாடுகளோடு தமிழகம் வியாபாரம் நடத்தி வந்தது. அதனால் வாணிகத்தில் வையம் புகழ மேன்மை பெற்று விளங்கியது. பொருளாதார நிலையிலும் பொலிந்து காணப்பட்டது. மக்கள் பசியும், பிணியும் இன்றி, மகிழ்ந்துவாழ்ந்து வந்தார்கள்.

இத்தகையான நன்னிலைமை எய்துவதற்குத் துணைபுரிந்தவர்கள் மதிப்புடன் வாழ்ந்த மன்னர்களாகும். அவர்களது செங்கோல் ஆட்சியே இவைகளுக் கெல்லாம் அடிப்படையாகும். இன்னதன்மையாக அரசநீதி இலங்கியது. யாவரும் இன்புற்று வதிந்து வந்தார்கள்.

(தொடரும்)

தென்னிந்திய மகாஜன புத்தகசாலை
எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்
வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்
செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# விகடத் துணுக்குகள்

சுந்தரம் : சம்பளம் இந்தாங்கோ, சார்
உபாத்தியாயர் : எவ்வளவுடா கொண்டுவந்தாய் ?
சுந்தரம் : சொல்லக்கூடாதுங்கோ, சார்.
உபாத்தியாயர் : ஏண்டா, சொல்லக்கூடாது.

சுந்தரம் : 'உடையது விளம்பேல்' என்று நேற்று தானே சொல்லிக் கொடுத்தீங்கோ.

எஸ். கே. எஸ்

---

டாக்டர் : நான் கொடுத்த மருந்து உங்களுக்கு நல்ல வலுவைக் கொடுத்திருக்கிறதல்லவா ?
நோயாளி : ஆஹா, ரொம்ப பலுவைக் கொடுத்திருக்கிறது. என்னால் இப்போது நடக்கவே முடிகிறதில்லை.

பி. சே. மா.

---

பக்தன் : உங்கள் ஊரில் விநாயகர் எந்தமுகமாக இருக்கிறார்?
குரும்பன் : யானைமுகமாக.

ச. நா. தமாதரு.

---

புருஷன் : என்னுடைய தாயார் செய்வதுபோல் பட்சணங்கள் செய்ய உனக்குத் தெரியுமா ?
மனைவி : ஓ, தெரியும். ஆனால் தங்கள் தகப்பனாருக்கு உண்டான அஜீரணபேதி தங்களுக்கு உண்டானால் தாங்கள் தாங்குவீர்களா ?

N. R. கிருஷ்ணன்

---

குரு : சிஷ்யா ! சாஸ்திரங்கள் ஒருவராலும் கரை காணமுடியாத அவ்வளவு விசாலமுடையது.
சிஷ்யன் : அப்படியானால் அதில் எவ்வளவு பேர் குளிக்கலாம்.

M. நாகேஸ்வரன்

---

உபாத்தியாயர் : சூடு விரியச் செய்யும் என்பதற்கும், குளிர்ச்சி சுருங்கச் செய்யும் என்பதற்கும் ஒரு உதாரணம் சொல்லு.
மாணவன் : கோடை கால விடுமுறை ஆறு வாரங்களாக நீடித்தும், மாரிகால விடுமுறை மூன்று வாரங்களாக சுருங்கியும் இருக்கிறது சார்.

போ. ராமலிங்கம்

---

½ ரூபா டிக்கட் வாங்கிக் கொண்டு ஒருவன் 1 ரூபா இடத்தில் உட்கார்ந்து நாடகம் பார்த்ததால் அவர்மீது நாடக மானேஜர் வழக்குத் தொடுத்தார்.
மாஜிஸ்டிரேட் : ½ ரூபாய் டிக்கட்டுடன் 1 ரூபா யிடத்தில் உட்கார்ந்து நாடகம் பார்த்தது வாஸ்தவமா ?



நாடகம் பார்த்தவன் : உண்மைதான்.
மாஜிஸ் : அப்படியானால் உன்மீது குற்றம் ஏற்படுகிறது; அபராதம் விதிக்கப் போகிறேன்.

நாட-பார் : இல்லைங்கோ; எஜமானே. இரண்டு கண்களாலும் பார்ப்பவர்கள் 1 ரூபா கொடுத்தால் ஒரு கண் குருடனாகிய நான் அதே இடத்தில் உட்கார ½ ரூபா கொடுப்பது நியாயந்தானே! இது எப்படி குற்றமாகும் ?

E. R. ஆநந்தராவ்

---

உபாத்தியாயினி : அம்மா, உனது மகள் சரித்திர பாடத்தில் ஒன்றேனும் சரியான விடை எழுதவில்லை.
தாயார் : என்ன அம்மா, அவள் பிறப்பதற்கு முன் நடந்த சம்பவங்களைப் பற்றியெல்லாம் கேள்விகேட்டால் அவளுக்கு எப்படித் தெரியும் ?

T. வேலுப் பிள்ளை

---

ஆர்மோனிஸ்ட் (மிகவும் பருமனுடையவர்) :—எத்தனை கட்டை வைக்கவேண்டும்.
மிருதங்கம் அடிப்பவர் : ½ டன் கட்டை வைத்தாலும் போதாதென்று நினைக்கிறேன்.

அ. துப்புசாமி

---

புளியமரத்தின் கீழ் ஒரு ரிஷி கண்ணை மூடிக்கொண்டு தவஞ் செய்துவந்தார். போக்கிரி ஒருவன் சமீபத்திலிருந்த புளியங்கிளையை இழுத்து அவரது சடையில் கட்டியபின் விட்டு விட்டான். உடனே ரிஷி உயரக்கிளம்பினார்.

ரிஷி : ஐயோ, இது யார் செய்த வேலை ?

போக்கிரி : ஏன், சாமி! கைலாசம் போறீங்களா? எப்போ, வருவீங்கோ.

ரிஷி : நான் இப்போது போகவில்லை. போகும் போது சொல்லுகிறேன். அவிழ்த்துவிடும்.

*A. K. துப்புசாமி முதலியார்

---

மருந்து வியாபாரி : இந்த மருந்தை வாங்கிச் சாப்பிட்டால் கிழவர்கள் வாலிபர்களாவார்கள்.

ஒரு கிழவர் : ஆனால் இது உங்கள் வரையில் பலிக்காது போலும்.

S. தங்கச்சாமி

---

* ஒரு ரூபாய் பரிசுபெற்ற விகடம் அனுப்பியவர் விலாசம்:
T புதுப்பாளையம், விழுப்புரம்

# செங்குந்த யாத்திரைவாசி

(சென்ற இதழ், 113-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நாலடி

நேயர்களே! நாலடியார் பெருமையை விரிக்க விரிக்க விரிந்து கொண்டே போகும். நாலடி நிலம் எப்படி ஒரு பெரிய நகரத்தை உண்டாக்குவதற்கு இடந் தந்ததோ அதுபோல் அங்கு வதிவோர் பெருமையும் விரிந்திருப்பது இயற்கைதானே. என்றாலும் அதிகமாய் விரிக்க யான் விரும்பவில்லை. ஒரு காலத்தில் வந்து குடியேறி உள்ளூரரால் ஆச்சாரத்தில் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்டிருந்த சிறுபான்மையோர் இப்போது 'இவ்வூரில் எங்களைச் சேர்ந்த பத்துப் பதினைந்து குடும்பங்கள்தான் சுத்த சைவாச்சாரமுடையவை, ஏனைய ஆச்சாரமற்றவை' என்று பகிரங்கமாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்றால் நமது நாலடி சகோதரர்களின் திறமை எப்படிப்பட்டதென்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். நாலடியில் நான்கு நாட்கள் தங்கியிருந்து, ஐந்தாம் நாள் அதிகாலையில் அங்கிருந்து கால்நடையாகப் புறப்பட்டேன்.

## விண்ணகரம்

9 மணிக்கு முத்தாற்றை அடைந்து ஊர் சமீபத்திலிருப்பதை உணர்ந்து நீராடி, பூஜை முடித்துக்கொண்டு ஊரிற் புகுந்தேன். யான் முதல் முதல் நுழைந்த தெருவில் மூன்றாவது வீட்டிலிருந்து விபூதி ருத்திராக்க தாரணராய் ஒருவர் வெளியே வந்தார். வந்தவர் என்னை நெடுநேரம் எதிர்பார்த்திருந்தவரைப்போல் 'வாருங்கள், வாருங்கள், சுவாமிகள் வாருங்கள். நான் செய்த புண்ணியமே புண்ணியம்' என்று பணிவுடன் இன்முகங் காட்டி யழைத்தார். யானும் அவரை வணங்கிச் சென்று தெருத் திண்ணைமேல் உட்கார்ந்தேன். அவர் என்னை உள்ளே அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். வீடு மிக அழகாகவும், சுத்தமாகவுமிருந்தது. எனக்கு மிகுந்த உற்சாகமுண்டாயிற்று. முதலியாரது வீடும், உடலும், வாக்கும் இருப்பதைக் கண்டு அவரது உள்ளமும் அவ்வாறே இருத்தல் வேண்டுமெனக் கருதினேன். உண்மையில் அவ்வாறே இருந்ததென்பதில் சந்தேகமில்லை. யான் உட்கார்ந்தவுடனே தெருவில் வண்டி சத்தம் கேட்டது. 'சுவாமி! மன்னிக்க வேண்டும், ஒரு நிமிஷம்' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு தெருவிற்குச் சென்று உடனே திரும்பி வந்து, சுவாமிகள் வருகையால் இன்று யான் சிலாக்கியனானேன். இன்று மெய்கண்டசிவாச்சாரிய சுவாமிகளின் குருபூஜை தினமாகையால் பல எழைகளுக்கு உணவளிப்பதோடு தங்களைப் போன்ற பெரியோர்களுக்கும்............செய்வதுண்டு. அடுத்த ஊரிலுள்ள அருளானந்த பரசிவ சுவாமிகளைச் சீடர்களோடு எழுந்தருளுமாறு வேண்டிக்கொண்டு வண்டி யனுப்பினேன். சுவாமிகள்

208443



இன்று நிஷ்டையிலிருக்கிறபடியால் இங்கு [illegible] முடியாதெனத் தெரிந்து வண்டி திரும்பி வந்துவிட்டது. தாங்கள் [illegible] வந்து எழுந்தருளியிருப்பதைக் கண்டு என் உள்ளம் குளிர்ந்தது. என் விரதமும் முட்டின்றி முடிவெய்திற்று எனக் கூறி சாப்பிட வரவேண்டுமென்று அழைத்தார். யான் அவருடன் இரண்டாவது கட்டிற்குச் சென்றேன். அங்கு ஐம்பது கனவான்கள் வரையில் இருந்தார்கள். குருபூஜை முறைப்படிச் செய்யவேண்டியவற்றைச் செவ்வனே செய்து மகேஸ்வர பூஜை நிறைவேற்றப்பெற்றது. மூன்றாவது கட்டில் சுமார் 500 பேர் வரையில் சாப்பிட்டார்கள். சாப்பிட்டானதும் யானும் மற்றுஞ் சிலரும் மேல் மாடியிலுள்ள பெரிய கூடத்தில் உட்கார்ந்தோம். பின்னர் முதலியாரும் தமது போஜனத்தை முடித்துக்கொண்டு எங்களோடு வந்து சேர்ந்தார்.

இதுவரையில் என்னைப் பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. என்னைப் பற்றி சிலர் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவாவுடையவர்களாயிருந்தார்கள் என்று மாத்திரம் அவர்கள் முகக் குறியால் தெரிந்துகொண்டேன். மௌனமாயிருக்கிற என்னைக் கேட்க அவர்களுக்குத் துணிவுண்டாகவில்லை. வீட்டுக்கார முதலியார் கல்வி, கேள்வி, உலகானுபவம், நுண்ணறிவு பொருந்திய ஒரு அறிவாளி. அவர் முதல் என்னைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். என்னிடத்திலிருந்து எதையும் கிரகிப்பது யாருக்கும் கொஞ்சம் கஷ்டந்தான். பிறரிடமிருந்து மாத்திரம் வேண்டியவற்றைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும் ஆற்றல் என்க்குண்டு. ஆகவே அவர் கேள்விக்கு 'யான் ஒரு வழிப்போக்கன், யாத்திரைவாசி யென்றுஞ் சொல்லலாம். யான் நாலடியிலிருந்து வருகிறேன். அங்கு யான் பிச்சைக்கார முதலியார் வீட்டில் தங்கியிருந்தேன். யான் புறப்படும்போது 'விண்ணகரத்தில் குடுவ முதலியார் என்கிற சுக்கிரமணிய முதலியார் ஒருவர்தான் மனிதன், அவரை நீங்கள் அவசியம் அந்த பக்கம் போகும்போது பார்க்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். ஆற்றையடைந்ததும் ஊர் சமீபித்திருப்பதாக அறிந்து பூஜை முதலியவற்றை முடித்துக்கொண்டேன். வரும் வழியில் யாரையும் கண்டேனில்லை. ஊர் புகுந்து தங்களையே முதல் முதல் கண்டேன். இதுவே விண்ணகரா யிருத்தல் வேண்டுமென எண்ணினேன். அஃதுண்மையாயின் தாங்களே குடுவ முதலியாரா யிருக்க வேண்டும்' என பதிலுரைத்தேன்.

முதலியார் சிரமேற் கைகூப்பி 'சிவ!சிவ! சுவாமிகள் உத்தேசித்த யாவும் உண்மையே' என்றார். யான் கையமர்த்தி அவரை உட்கார வைத்து 'சாதாரணவழிப் போக்கனாகிய என்னைத் தாங்கள் சுவாமி என அழைப்பது தகாதே' என்றேன். அதற்கு முதலியார், அடியேன் பெரியோர்கள் வரவை எதிர்பார்த்திருக்க இன்று பரமசிவம் போல் விபூதிதாரணராய் வந்தருளி என் விரதத்தை நிறைவேற்றிய சுவாமிகளை வேறென்னென்று அழைப்பேன். அடியேனை ஆட்கொள்ள வந்த உண்மையடியார் தாங்களே. அன்பர் பணிசெய்தலே யான் அடையக் கூடிய பிறவிப்பயன். அதுவே அடியேனுக்குப் பேரின்பம் என்றார்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் யான் முதலியாரைப் பார்த்து 'தாங்கள் கல்வி கேள்விகளில் தேர்ந்தவராயும், பரம சைவாச்சார முடையவராயும், பக்தி சாஸ்திர ஆராய்ச்சி புடையவராயு மிருந்தும்—வருத்தப்படக் கூடாது—தங்களுடைய பெயர் ஒரு மாதிரியாயிருக்கிறதே, பொருள் விளங்கவில்லையே' எனக் கேட்டேன். முதலியார் முகமலர்ச்சியோடுபுன்னகை செய்து 'சுவாமிகளே! தாங்களறியாததா? பெயராலாவதென்ன? வேடத்தாலாவதென்ன? உலகம் பழிப்ப தொழித்தலன்றேமேலோர் கொள்கை. 'குடுவை' என்னும் சொல் 'குவடு' என்பதன் மருவு. இதோ தோன்றும் மலையின்உச்சியில், குவடு (மலை உச்சி) அல்லது குவடன் என்று சொல்லப்படும் எங்கள் குலதேவதை எழுந்தருளி யிருக்கிறது. ஆகவே அது எங்கள் குலப்பெயர்களுள் ஒன்று. காளத்தி மலைமேலுள்ள கடவுளைக் குடுமித் (உச்சி) தேவன் என்றல் சுவாமிகளுக்கு ஞாபகமிருக்கலாம். எனக்கு 'குவடு' என்ற பெயர் என்பாட்டனாரால் சூட்டப் பெற்றது. அது பின்னால் 'குடுவை' என்று மருவியதால் எங்கள் வீட்டிற்கு வந்திருந்த ஒரு சுவாமியார் எனக்கு சுப்பிரமணியன் என்று பெயரை மாற்றி வைக்கவேண்டுமென்றார். அது எனக்கு நன்றாய்த் தெரியும். எனக்கு அப்போது வயது ஏழு. ஆனால் என்தகப்பனார் தமது தந்தையாரால் மனப்பூர்வமாக கொடுக்கப் பெற்ற பெயரை மாற்ற விருப்பமில்லாதவராய் 'குவடு என்கிற சுப்பிரமணியன், என்று அழைக்கலானார். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் மூதாட்டியின் திருவாக்கை அவர் பலருக்கும் எடுத்து போதிக்கும் விருப்பமுடையவராகையால். ஆனால் ஊரிலுள்ள ஜனங்கள், குடுவைமுதலியார் என்கிற சுக்கிரமணிய முதலியார் என்றே அழைக்கலாயினர். அவ்வாறு உச்சரிப்பது அவர்களுக்கு நெடுங்காலப் பழக்கமாயிருந்து வருதலால், என்னுடைய பெயரை சரியாகச் சொல்லிக்கொண்டு யாராவது வெளியிலிருந்து என்னைத் தேடிவருவார்களானால் அப்பெயருடையார் இவ்வூரிலில்லை என்று சொல்லிவிடுவது வழக்கம். அப்பெயருக்குத் தபால் வந்தாலும் அப்பெயருடையார் இங்கில்லை என்று சாவுகாகித ஆபீசுக்குத் (Dead Letter Office) தான் போய்விடும். இந்த ஒரு விஷயத்தில் கூட இவ்வூராரைத் திருத்த என்னால் முடியவில்லை. எல்லோரும் செங்குந்தர்கள்தான். என்ன செய்கிறது. ஆகவே என் பாட்டனாரும் தந்தையாரும் மனமுவந்து சூட்டிய பெயரை உருக்கி ஊரார்களாவென்னும் அச்சிற் பதித்தெடுத்தாற் போன்ற 'குடுவை முதலியார் என்கிற சுக்கிரமணிய முதலியார்' என்னும் திருநாமத்தைத் தற்போது சூட்டிக்கொண்டுள்ளேன் எனப் பதிலுரைத்தார். ஊர் ஜனங்களுடைய அறியாமை குறித்து நானும் நண்பர்களும் நகைத்தோம். முதலியாரும் எங்களோடு கலந்துகொண்டார்.

---

மித்திரன் வளர்ச்சியுற விரும்பினால்
இன்றே உங்கள் சந்தாவை
அனுப்பி வையுங்கள்.

## கதம்ப விநியோகம்

உலகில் மொத்தம் 61994 சினிமாக்கள் இருக்கின்றன. இவற்றில் 36955 பேசும் சினிமாக்கள்.

இந்தியாவில் 465 சினிமாக்களும் அவற்றில் 225 பேசும் சினிமாக்களும் உள்ளன.

---

உலகில் சராசரி தினந்தோறும் 60,000 பிள்ளைகள் பிறக்கின்றன. அதே சமயத்தில் 40000 பேர் மரிக்கிறார்கள். எனவே உலக ஜனத்தொகை வருடந்தோறும் 60,00,000 வீதம் அதிகரிக்கிறது.

---

மோட்டார் சக்கரங்களுக்கு அடிக்கடி காற்று அடிக்கவேண்டிய கஷ்டத்தைப் போக்குவதற்கு புதிதாக ஒரு பம்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பம்பு ஒவ்வொரு சக்கரத்திலும் சேர்த்து விட்டால் அதில் ஒருதிட்டமான அளவுள்ள காற்று எப்பொழுதும் இருக்கும்படி அது பார்த்துக் கொள்ளும்.

---

சென்னையில் வீடு இல்லாமல் அநாதைகளாய் தெருக்களில் வசிப்போரின் தொகை 10728. இதில் ஆண் 7832, பெண் 2896.

---

வெளிச்சமானது விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் பாய்ந்து வருகிறது.

சூரியனிடத்தி லிருந்து வெளிச்சம் நமக்கு வந்துசேர 8 விநாடிகள் பிடிக்கின்றன.

மிக அருகாமையில் உள்ள நட்சத்திரம் 'ஆல்பா சென்டராஸ்' என்பதாம், இதனிடத்திலிருந்து நமக்கு வெளிச்சம் வந்து சேர $4\frac{1}{2}$ வருடங்கள் பிடிக்கிறதாம். வெகுதூரத்திலுள்ள நட்சத்திரம் 'ஸ்பைரல் நிப்யூலா'. இதனிடத்திலிருந்து நமக்குப் பத்து லட்சம் வருடங்களில் வெளிச்சம் வந்து சேருமாம்.

---

ஜப்பான் தேசத்தில் சற்றேறக் குறைய 90 லட்சம் தறிகளும் இங்கிலாந்தில் 5 கோடி தறிகளும் இருக்கின்றனவாம்.

---

உலகில், சராசரி 1000-க்கு 13 இரட்டைக் குழந்தைகளும் 10 லட்சத்திற்கு ஒன்றுவீதம் மூன்று குழந்தைகளும் பிறக்கின்றனவாம்.

---

உலகில் மொத்தம் 16 கோடிபேர் ஆங்கிலம் பேசுகின்றனராம்.

---

1935-ம் ஆண்டில் அமெரிக்காவுக்கு வசூலாக வேண்டிய கடன் 8100 கோடி டாலர் இருக்குமெனத் தெரிகிறது.

---

டர்க்கி போலீசில் புதிதாய்ச் சேருபவர்கள் பிரம்மசாரிகளா இருக்க வேண்டுமென ஒரு சட்டம் செய்யப்பட் டிருக்கிறது.

---

யாசித்த குற்றத்திற்காக லண்டனில் ஓர் பிச்சைக்காரன் கைது செய்யப்பட்டபோது 360 பவுன் வரையில் அவனுடைய கணக்கில் இருப்பு காட்டக்கூடிய பாங்கியின் பாஸ் புஸ்தகம் ஒன்று அவனிடம் காணப்பட்டதாம்.

---

பர்மாவில் 1932-ம் ஆண்டில் 24,70,50,000 காலன் மண்ணெண்ணெய் எடுக்கப்பட்டிருக்கிறது.

---

ஜப்பானின் ஜனத்தொகை ஒரு நிமிஷத்திற்கு நாலு குழந்தைகள் வீதம் அதிகரிக்கிறதாம். 1932-ம் ஆண்டில் மட்டும் அங்கே 21,82,713 குழந்தைகள் பிறந்துள்ளனவாம்.

---

பழச்சாற்றை பச்சைக் கண்ணாடி புட்டியில் அடைத்து வைத்தால் அதன் இயற்கை நிறமும் ருசியும் கெடுவதில்லையென நியூயார்க் விவசாய பரிசோதனை சங்கத்தலைவரான டி. வி. கார் பென்டர் கூறுகிறார்.

---

அலுமினியப் பாத்திரத்தில் சமைப்பது உடல் நலத்திற்கு ஏற்றதன்றென இதுவரையில் கூறப்பட்டது. ஆனால், ஆரோக்கிய தூதிகை என்ற பத்திரிகையில் இதற்கு முற்றும் மாறாக அதன் ஆசிரியரால் கீழ்க்கண்ட விதமாய் எழுதப்பட்டுள்ளது.

'நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களில் அலுமினியம் இயற்கையாகவே கலந்துள்ளது, நாம் அலுமினியம் அதிகமாய் உட்கொள்வதால் கெடுதி நேரிடாதென சாஸ்திரங்களின் ஆராய்ச்சியால் தெரிகின்றது. எனவே, அலுமினியப் பாத்திரங்களில் ஆகாரங்களைச் சமைத்தற்கு நாம் அஞ்சவேண்டியதின்று. இந்தப் பாத்திரங்களில் ஆண்டு முழுதும் சமைத்துச் சாப்பிடுவதாயினும் கெடுதி உண்டாகாது'.

அலுமினியம் கெடுதி தருவதென ஒருசாராரும், தராததென மற்றொரு சாராரும் கூறுவராயின் நாம் எதைக் கொள்வது. இது பற்றி தெளிவாய்த் தெரிவிக்கும்படி அதே ஆசிரியருக்கு எழுதியிருக்கிறோம். பதில் கிடைத்த பின் அடுத்த இதழில் வெளியிடுவோம்.

---

வானம்பாடி, கழுகு, காக்கை இவை ஆகாயத்தில் ஆறாயிரம் அடி உயரம் பறக்கக்கூடுமாம்.

---

நவக்கிரகங்களில் வியாழன் எல்லாவற்றிலும் பெரியது. அதன் குறுக்களவு 86,500 மைல் நீளம். எல்லாவற்றிலும் சிறியது புதன். அதன் குறுக்களவு 3030 மைல் நீளம்.

---

நமது தேசத்தில் மொத்தம் 15,000,000 பாலிய விதவைகள் இருக்கின்றனர்.

---

# கூண்டோடு கைலாசம்

[E. V. S. கோவை]

## ஓர் உண்மைச் சிறு கதை

**'கடவுள் எங்கும் உள்ளார், உலகில் யாவும் நன்கு நடைபெறுகின்றன'—என்றார் ஆங்கிலக்கவி ப்ரௌனிங்—இக்கூற்று உண்மையா?**

கோடை கால விடுமுறை; கவலையின்றி காலத்தைப் போக்கினோம். நானும் எனது நண்பர் வீராசாமியும் தினந்தோறும் மாலை நேரத்தில் நந்தவனத்திற்குச் சென்று உலாவிவருவது வழக்கம்.

வழக்கம் போல ஒருநாள் நானும் வீராசாமியும் சாயங்காலம் 6-30 மணிவரை உலாவிவிட்டு வெரைட்டி ஹால் ரோடு வழியே மீண்டு வந்துகொண் டிருந்தோம். சினிமா கொட்டகையில் என் போட்டால் எள் விழாது. மேலும் மேலும் உள்ளே தள்ளிச் செல்லுவோருக்கும் கணக்கு வழக்கில்லை. அவ்வளவு சிறப்பான காக்ஷியாதென அறிய நாங்களும் ஆவல்கொண்டு நோக்கினோம். வெளியில் ஒரு பெரிய விளம்பரப் படத்தைப் பார்த்தோம். அதில் மனத்தைக் கவரத்தக்க காக்ஷி ஒன்று தீட்டப்பட்டிருந்தது. நாங்களும் உட்புகுந்தோம். பெஞ்சுக்கு அநுமதிச் சீட்டுகள் வாங்கிச் சென்றோமாயினும் இடமின்மையால் அவற்றை நாற்காலிக்கு மாற்றிக் கொண்டோம்.

கதை வெகு சுவாரசியமா யிருந்தது. தனது குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு பெண் எவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்களை அடைந்தாள் என்பதை தெளிவாகக் காட்டியது. மணி எட்டரை ஆயிற்று. இரவு வந்தனத் திரையும் விடப்பட்டது. ஜனங்கள் கும்பல் கும்பலாக வெளிக்கிளம்பினர். எனக்குமட்டும் எழுந்திருக்க மனமில்லை. இவ்வளவு கஷ்டப்படும் பெண்களும் உலகில் உண்டோ என்ற சந்தேகம் என் மனதில் தோன்றிற்று. கதையில் தான் இது நடக்கும், உண்மையில் இவ்வாறு நேர்வதில்லை எனத் தீர்மானித்தேன். நானும் வீராசாமியும் மெள்ள வெளியே புறப்பட்டோம். என் மனதில் மட்டும் இன்னும் அந்த சினிமாவில் கண்ட துக்ககரமான காக்ஷிகளே தாண்டவமாடின. கண்முன் என்ன நடக்கிறதென்பதைக்கூட சரியாய் அறிய முடியவில்லை. யாரோ கந்தலுடுத்திய இருபத்தைந்து வயதுள்ள ஓர் ஏழை மாது வெளியே நீட்டிக்கொண்டிருந்த என் பணப்பையை மெதுவாக எடுத்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டதும், அதைக்கண்ட என் நண்பர் அம்மாதை விரட்டினதும் அப்போது தான் எனக்கு விளங்கின. நானும் என் சுய உணர்ச்சிக்கு வந்தேன். எனது நண்பர் அவளை மிரட்டிக்கொண்டிருந்தார். நானும் அவளை போலீஸ்காரர் வசம் ஒப்புவிப்பதாகப் பயமுறுத்தினேன். ஒன்றுக்கும் அவள் வாய் திறக்கவில்லை.

மெதுவாகப் பல வீடுகளைக் கடந்து சென்றாள். நாங்களும் அவளறியாமல் அவளைப் பின் தொடர்ந்தோம். திடீரென அவள்

ஒரு வீட்டிற்குள் நுழைந்தாள். சிறிது நேரத்தில் சில பழந்துணிகளையும், அரிசி, பருப்பு முதலிய சாமான்களையும் எடுத்துத் திரும்புவதைப் பார்த்தோம். எனது நண்பர் உடனே அவளைக் கைப்பிடியாய் பிடித்து வீட்டுக்காரர் முன் தள்ளிச் சென்றார். வீட்டுக்காரர் அவளை என் திருடினாய்? என்று கேட்க, அவள் ஒன்றும் கூறாது வாளாயிருந்தாள். எனக்குக் கோபம் வந்தது. உடனே அவளைப்பார்த்து "என், —கொஞ்சங்கூட மானமின்றி—இந்த ஈனத்தொழிலுக்கு— இந்த இளவயதில் தலைப்பட்டாய்? உனக்குப் புத்தியில்லையா? மானமில்லையா? நாணமில்லையா?" என ஆத்திரத்துடன் கேட்டேன்.

அப்போது அப்பெண்பிள்ளையின் கண்களில் நீர் தாரை தாரையாய் வந்தது, கோபக்குறியும் காணப்பட்டது. அவள் எங்களை நோக்கி, 'இரக்கமற்ற அரக்கர்களே! எல்லாம் உங்களால்தான் நேர்கிறது. நான் என்ன செய்வேன்!! மில் கூலிகளாயிருந்த என்னையும் என் வீட்டுக்காரரையும் மூன்று மாதங்களுக்கு முன் வேலையிலிருந்து துரத்திவிட்டார்கள், நாங்கள் ஒரு பாபத்தையும் அறியோம். வேலையிலும் பயந்து நயந்து உண்மையாகப் பாடுபட்டோம். கம்பெனியில் நஷ்டமாம். பங்குதாரர்களுக்கு முன்னைப்போல் கொள்ளை லாபம் கொடுக்க முடியவில்லையாம். எஞ்சினிருக்கும், மானேஜருக்கும், சில மேல்உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளம் குறைக்கவேண்டி நேருமாம். அதைத் தடுப்பதற்காக எங்களைப்போன்ற கூலிவேலைக்காரர்களை வேலையினின்றும் தள்ளிவிட்டனர். சென்ற இரண்டு மாதங்களாய் வேலைக்காக நானும் என்கணவனும் எங்கெங்கோ தேடியும் கிடைக்கவில்லை. எங்களுக்கு வேலையுமில்லை. சாப்பாட்டிற்கு வேறு வழியுமில்லை. சென்ற விடமெல்லாம் 'கிடையாது' போ! போ!!' என்று திட்டி அனுப்புகிறார்கள். எனது புருஷனும், என் இரு குழந்தைகளும் பட்டினியால் மயங்கிச் சோர்ந்து கிடக்க நான் எப்படிப் பார்த்துக்கொண் டிருப்பேன். பிச்சை எடுக்கச் சென்று பார்த்தேன். பிச்சை போடுவாரில்லை. என் குழந்தைகள் சுரத்தாலும் பசியாலும் மெலிந்து இறக்கும் தருவாயி லிருக்கின்றன! சுரம் கண்ட குழந்தையை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றபோது ரோட்டில் வேகமாக ஓடிய மோட்டாரால் தாக்கப்பட்டு கால் எலும்பு பிசகி, என் புருஷன் நகர வழியின்றி யிருக்கிறார். அந்தப் பணக்கார மோட்டார் பாவி கீழே விழுந்த மனிதனையும் குழந்தையையும் திரும்பிப் பார்க்காமல் கூட பறந்து சென்றான்! அவனுக்கு தண்டனை யுண்டா? மூன்று நாளாக அசையாமல் கிடக்கிறாரே!! இன்னேரம் மூன்று பேருக்கும் முக்காலுயிர் போயிருக்குமே? அவர்களைப் பிரிந்து நான் எப்படி உயிர் வாழ்வேன்? இதையாவது கொண்டுபோய்க் கொடுத்து அவர்களைக் காப்பாற்றலாம் என்றிருந்தேன்! பாதகராகிய நீங்கள் எங்களுக்கு இக்கெடுதல் செய்து விட்டீர்கள்! உங்கள் குழந்தை குட்டிகள் தொலையாதா!" என்று பலவாறு பிதற்றி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு தன் குடிசை நோக்கி வெறி பிடித்தவள்போல் ஓடினாள்.

அவள் கூறிய சொற்கள் கூரிய அம்புகள் போன்று என் மனத்தில் பாய்ந்தன. ஆயினும், திருட்டுக்குத் தண்டனைகிடைக்கும் என்று



தப்பித்துக் கொள்ளத் தந்திரமாக ஓடுகிறாளோ என்றும், அவள் சொன்னவற்றின் உண்மை என்ன என்றும் உணர்ந்து கொள்ள என் நண்பனைக் கூட்டிக் கொண்டு அவளைப் பின்பற்றி அவள் குடிசைக்குப் போனேன்.

ஆ! அங்கே என்ன பார்த்தோம். அம்மாது இருண்ட ஓர் குடிசையை அணுகினாள். விளக்கு வைப்பதற்கும் அவர்களிடம் ஒன்றுமில்லை என்று நன்கு தெரிந்தது. உடனே நான் என்னிடமிருந்த மின்சார விளக்கை (டார்ச்லைட்டை) எடுத்து உள்ளே பிடித்தேன். அங்கே பெருமூச்சு விட்டுக்கொண்டு தலைகவிழ்ந்த வண்ணம் படுத்திருந்த மெலிந்த தேகமுள்ள ஒரு நடுவயதுள்ள மனிதனையும், மெலிந்து காய்ந்து மரப்பாவைகளெனத் துவண்டு கிடந்த சிறு குழந்தைகள் இரண்டையும் கண்டோம். ஒரு குழந்தை முன்பே இறந்து விட்டதாகத் தெரிந்தது. மற்றொன்று பிரக்ஞை அற்றுக் கிடந்ததைப் பார்த்தோம். தாய், குழந்தைகளைத் தொட்டுப் பார்த்தாள். குழந்தை இறந்ததை அறிந்ததும், 'ஐயோ! என்னை விட்டுப் பிரிந்தாயே! கண்ணே! இனி எப்படிப் பிழைப்பேன்!!' என்று கத்திக்கொண்டு கீழே சாய்ந்தாள். மனம் வருந்திய நான் அவளிடம் ஒரு ரூபாயைப் போட்டேன். அவள் அதைச் சிறிதும் கவனித்ததாகத் தெரியவில்லை. ரூபாய் கீழே உருண்டோடிற்று.

ஒரே நிசப்தமா யிருந்தது. நானும் எனது நண்பனும் அந்த இருண்ட குடிசையை விட்டு மருண்ட மனத்துடன் வீடு நோக்கி நடந்தோம். மறுநாட் காலை முன்னாளிரவு நான் கொண்டிருந்த இரக்கமற்ற மனப்பான்மைக்காகப் பச்சாத்தாபப்பட்டு, அக்குடிசையில் என்ன நேர்ந்ததென்று சென்று பார்த்தேன். அங்கே எல்லோரும் இறந்து கிடப்பதைக் கண்ணுற்றேன். முனிசிபாலிடியாரிடம் தெரிவித்தேன்.

ஏதோ ஒரு உணர்ச்சியால் ஹிருதயமே உடைவதுபோன் றிருந்தது. இதைப் போன்ற எத்தனையோ உண்மைச் சம்பவங்கள் நம்மைச் சுற்றிலும் நமக்குப் புலனாகாமலே நடக்கின்றன. எங்கேயோ நடந்ததாகக் காண்பிக்கப்பட்ட சினிமா ஸீனை (காக்ஷி)க்காட்டிலும் உண்மையில் நடந்த இச்செய்தி எனது மனத்தில் பல புது உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டது; எனது வாழ்வின் நோக்கங்களை முற்றிலும் மாற்றி விட்டது.

இத்துயரங்களுக் கெல்லாம் யார் ஜவாப்தாரி? யார் குற்றவாளி? யாரால் விளைந்தன இக்கொடுமைகள்?—சமூகம், நமது சமூக அமைப்பு, உண்டு கொழுத்திருப்போர், வீண் ஆடம்பர வாழ்க்கை நடத்தும் பணக்காரர், தாங்கள் ஏழைகளுடைய தர்மகர்த்தாக்கள் (டிரஸ்டி) என்று உணராத செல்வவான்கள், நம் சமூகத்தலைவர்கள் இவர்களே காரணமாவர்.

---

இளைஞர்கள் தம் உயிரென மதிக்கத் தக்கவை—சமூக, தேசிய உணர்ச்சிகளே.

---

# நமது தபால் பெட்டி

[நமது சமூக சம்பந்தமாகவும், உலகப் பொது விஷய சம்பந்தமாகவும் சந்தாதாரர்களால் கேட்கப்படும் கேள்விகளில் முக்கியமானவற்றிற்கு இங்கு பதில் எழுதப்படும். உடனுக்குடன் விடை தெரிவிக்க இயலாத கேள்விகளுக்குச் சிறிது தாமதித்தாவது தகவலறிந்து விடை இறுக்கப்படும்.]

(ப - ர்.)

கேள்வி:—சென்ற வெளியீட்டில் வா. பொன்னம்பலம் கேட்ட கேள்விக்குத் தாங்கள் அளித்த பதில் முற்றும் நியாயமானதாயினும் இரண்டு விஷயங்கள் சரியெனத் தோன்றவில்லை. ஈரோட்டில் நடைபெற்ற முதல் மகாநாட்டிற்கு இலங்கை, கரவெட்டி கிழக்கிலிருந்து P. K. குழந்தைவேலு முதலியார் (இலங்கை அரசாங்க அபாதகிரி) சமூகஞ் செய்தவராவர். இவர் ஒருவரே இலங்கை வாசிகளுள் தனியே மகாநாட்டுக்கு வந்தவராவர். அப்படியிருந்தும் 'இலங்கை வாசிகள் இதுவரை இங்கு நடைபெற்ற மகாநாடுகளுக்கு வந்தது இல்லை' எனக் குறிப்பிட்டது ஏன்? இலங்கையின் வடமாகாணத்திலுள்ள செங்குந்தர்கட்குள் இருபிரிவினர்களிருக்கிறார்களென்பது தங்களுக்குத் தெரியுமா?

வே. த. ஆறுமுகம், கோடிக்காமம்.

பதில்:—அன்பர் திரு. ஆறுமுகம் அவர்கள் சமூகத்தினிடத்தும் தமது நாட்டினிடத்தும் நிறைந்த பற்றுடையார் என்பது நன்கு விளங்குகிறது. அவர் கேட்டுள்ள இரு கேள்விகளும் நியாயமானவைகளே. கரவெட்டி கிழக்கு திரு. P. K. குழந்தைவேலு முதலியாரவர்கள் ஈரோட்டு மகாநாட்டுக்கு சமுகந்தந்தது உண்மையேயாகும். ஆனால், அவர்கள் அச்சமயம் இந்தியாவில் உத்தியோகத்திலிருந்தனராதலின் அவரை இலங்கையின் பிரதிநிதியெனக் கொள்ளாது இந்தியப் பிரதிநிதியாகவே ஏற்றுக்கொண்டோம். சில ஆண்டுகளாக இந்தியாவில் வசித்துவரும் ஒருவரை அவ்வாறு கொள்ளுதலே நியாயமென எண்ணினோம். அவ்வாறு இந்தியாவில் உத்தியோகம் பார்ப்பவரை இலங்கையின் பிரதிநிதியாகக் கொள்ளுவோமாயின், நமது மகாநாடுகளுக்கு தென் ஆப்பிரிக்காப் பிரதிநிதிகளும் வந்திருப்பதாகக் கொள்ளுதலும் நியாயமாகும். ஏனெனில், காஞ்சீபுரம் மகாநாட்டிற்கும், திருவாரூர் மகாநாட்டிற்கும் முறையே கீழையூர் சொக்கலிங்க முதலியாரவர்களும், A. அமிர்தலிங்க முதலியாரவர்களும் விஜயம் செய்திருந்தனர். இருவரும் அம்மகாநாடு சமயம் இந்தியாவில் வசித்து வந்தனராயினும், பெரும்பாலும் வியாபார நிமித்தமாக தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஜோஹானஸ்பர்க்கில் வசிப்பவர்களாதலின் என்க.

வடமாகாணப் பிரிவு சம்பந்தமான மற்றொரு கேள்விக்கு அடுத்த மித்திரனில் விடை எழுதுகிறோம்.



கேள்வி:—நமக்குள் இருக்கும் உட்பிரிவுகளை நீக்கி ஒற்றுமையாக்குவது எவ்வண்ணம்?

—மேற்படியார்.

பதில்:—இது ஒரு சிக்கலான விஷயம். நமது உட்பிரிவை நீக்கி ஒற்றுமையை யுண்டாக்குவது அவ்வளவு இலேசில் முடியக்கூடிய செயலன்று. இதற்கு இடைவிடா முயற்சி அவசியமாகும். முயற்சி எடுப்போர் சகிப்புத் தன்மை பொருந்தி, சாந்தம் ததும்பியவர்களாயிருக்கவேண்டியது மிக இன்றியமையாததாம்.

நம்மவரனைவரும் பழைமையில் பற்று நிரம்பியவர்கள். புதிய வழிகளைப் பின்பற்றுவதெனின் புலியின் குகையை நாடி நடப்பதாக நினைத்து, அதனால் பெருந்தீங்கு நிகழக்கூடுமென நம்பும் இயல்பினர். 'பழைய காலைத் தூர்க்காதே, புதிய காலைத் தோண்டாதே' என்பது இவர்கள் பொருட்டே ஏற்பட்ட தனிமொழி. புதிய வழிகளைப் பின்பற்ற விரும்புவோரை இலேசில் அவர்கள் விருப்பின்படி நடக்க அனுமதிக்கமாட்டார்கள். தங்களால் இயன்ற அளவு முட்டுக்கட்டை தர முனைந்து நிற்கும் இயற்கையான குணம், பெரும்பாலும் நம்மவர்களுக்குள் எங்கும் ஒரே தன்மையாய் அமைந்திருக்கிறது. எனவே, மிக ஜாக்கிரதையாய், அனைவரையும் தழுவி, பிளவு ஒன்றும் ஏற்படாத வகையில் நம்மவர்களது உட்பிரிவை நீக்க முயலுதல் வேண்டும்.

ஒற்றுமை நிலவ முதற்காரணமாய் விளங்குவது ஒற்றுமைத் திருமணங்களே. ஊருக்கு ஒன்றிரண்டு ஒற்றுமை மணங்கள் நடக்கத் தொடங்கிவிடுமாயின் நமது வேற்றுமைகள் அன்றோடு மறைந்தனவாகக் கொள்ளலாம். 'அவர் வேறு, நான் வேறு' என்ற மனப்பான்மையுடன் பிரிந்து வாழும் தன்மையினையுடைய நாம், ஒருவரையொருவர் கண்டு மனமொத்த அன்பர்களாய் நெருங்கிப் பழகினாலொழிய ஒற்றுமைக் கல்யாணங்கள் நிகழ்வது அருமையேயாகும். அதிலும், ஆண்களைக் காட்டிலும் இவ்விஷயத்தில் பெண்கள் மனம் ஒருமித்தலே மிகவும் பயன்தரக் கூடியதாம். அவ்வாறு பல பிரிவினரும், தமது உட்பிரிவையும் வேற்றுமையினையும் மறந்து, ஒன்றுபட்ட உள்ளத்தினராய்க் கூடிக் களிப்பதற்கே மகாநாடுகள் சந்தர்ப்பம் தருகின்றன. இதுவரை நடைபெற்ற மகாநாடுகளுக்கு விஜயம் செய்ததின் பயனாய் உள்ளம் ஒருமித்த சில குடும்பங்களில் ஒற்றுமை மணங்கள் நிகழ்ந்திருக்கிறதென்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆனால், இந்த மாகாண மகாநாட்டுக்கு மூலைமுடுக்கில் உள்ளோரனைவரும் வர இயலாதென்பது உண்மையாகும். இதன் பொருட்டே ஒவ்வொரு கிராமத்திலும் கிளைச்சங்கங்கள் நிறுவப்பட வேண்டியதும், அதன் கூட்டங்களுக்காக பல அறிஞர்களை பல பாகங்களிலிருந்து அழைக்க வேண்டியதும் அவசியமாகும். அத்துடன், ஆண்டுதோறும் சங்கவிழா ஜில்லா மகாநாட்டைப்போல் விரிவாக நடத்தி, அதற்கு ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் அழைப்புத் தான் அனுப்ப வேண்டியதும், அழைப்புக்கிணங்கி ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒரு சிலரேனும் விழாவிற்கு விஜயம் செய்யவேண்டியதும் மிகமிக அவசியமாகும். இதுவேயன்றி, யாத்திரை

யாகவோ, வியாபார சம்பந்தமாகவோ வெளியூர்கட்குச் செல்லும் செங்குந்தர்கள் தாங்கள் தனித்துப் போவதை யொழித்து, தங்கள் மனைவி மக்களுடன் சென்று செங்குந்தர்களின் இல்லத்திலேயே தங்கி, பெண்களை ஒருவரை யொருவர் அறிந்து மகிழ சந்தர்ப்பம் தரவேண்டியதும் அவசியமாகும். இவ்வாறெல்லாம் பலவிடங்களில் பலவிதப் பிரிவினராயுள்ள செங்குந்தர்கள் பழக அடிக்கடி சந்தர்ப்பம் வாய்க்குமாயின், இவர்களுக்குள் உள்ள வேற்றுமை நீங்கி ஒற்றுமைக் கல்யாணங்கட்கு அஸ்திவாரம் போடப்பட்டுவிடுமென்பது நிச்சயம்.

இளைஞர்கள் இது விஷயத்தில் நிறைந்த முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். முதியவர்கள் தாங்கள் முன்னின்று பிரயத்தனம் செய்யாவிட்டாலும், நடைபெறும் முயற்சிக்காவது இடையூறு விளைக்கா திருக்கவேண்டும். இப்படி சில ஆண்டுகள் முயற்சி நடைபெறின், முன்னர் சமீபத்திலுள்ளவர்களோடும், பின்பு, வெகு தூரத்திலுள்ளவர்களோடும் சம்பந்தம் ஏற்பட்டுவிடுமென நிச்சயமாய்க் கூறலாம்.

* * *

கேள்வி:—சுமார் 6 லட்சம் ஜனத்தொகையுள்ள நமது மரபில் கற்றவர்கள் அதிக மில்லாதது என்?

T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

பதில்:—இது ஒரு முக்கியமான கேள்வி. 'பணமில்லாததால் படிப்பில்லை' எனச் சிலர் சுலபமாகப் பதில் கூறிவிடுவர். இது பொருத்தமான பதிலன்று. அதைவிட 'மனமில்லாததால் படிப்பில்லை' எனக் கூறினும் ஒருவாறு பொருத்தமாக இருக்கும். இவர்களுக்குப் படிப்பு இல்லாததற்குப் பல காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, இவர்கள் மேற்கொண்டுள்ள தொழில் இவர்களைப் படிக்கவொட்டாமல் தடைசெய்கிறது. நெசவுத் தொழிலுடைய வகுப்பினர் அனைவரும் கல்வியில் மிகவும் பிற்போக்கினராகவே இருக்கின்றனர். அன்றாடம் நெய்கின்ற ஆடையை கடைகளில் கொண்டுபோய்க் கொடுத்து, தான் சம்மதித்த விலையைப் பெற்றுக்கொள்வதற்குக் கல்வியின் அவசியம் எங்கே இருக்கிறது. நம்மவர்களில் நன்கு படித்து மேனிலையிலிருப்போ ரனைவரும் நெசவை விட்டு நீங்கியவர்களாகவே இருப்பது இதற்குப் போதிய உதாரணமாகும். இத்துடன் நெசவுத் தொழிலாளருக்குப் படிக்க ஒழிவு நேரமும் கிடைப்பதில்லை. விடியற்காலையில் எழுந்தால் பாவோடுதல், தோய்தல், நெசவு நெய்தல் ஆகிய தொழில்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து செய்ய வேண்டி யிருப்பதால் படிப்பில் காலத்தைச் செலவழிக்க சௌகரியப் படுவதில்லை. அப்படி எப்பொழுதாவது ஒழிவாக இருக்க நேரினும் அதனை உற்சாகமாகக் கழிக்கவேண்டுமென்ற ஆவல், ஓயாது தொழில் புரியும் ஒருவனுக்குத் தோன்றுவது இயற்கை யல்லவா? எனவே இவர்களைப் படிப்பற்றவர்களா யிருக்கச் செய்தவற்றுள் நெசவுத் தொழிலே முக்கிய காரணமெனக் கூறலாம்.

இரண்டாவதாக, இவர்கள் எந்த ஊரில் வசித்தாலும் ஒரே மொத்தமாகத் தனித்ததொரு பாகத்தில் வசிக்கத் தொடங்குகின்றனர். சிதறுண்டு பல வகுப்பினரின் மத்தியில் வசிப்பராயின் படித்த அவர்களோடு பழகும் நமது பிள்ளைகளின் உள்ளத்திலும் படிக்க வேண்டு மென்ற ஆவல் இயற்கையாய் உதிக்கலாம். அந்த சந்தர்ப்பமும் இவர்களுக்கு இல்லை.



மூன்றாவதாக, இவர்கள் வெளியில் பல இடங்கட்குச் செல்லுதற்குரிய சந்தர்ப்பம் வாய்க்கப் பெறுவதில்லை. அப்படிச்செல்ல நேருமாயின் தமக்குப் படிப்பில்லாமையால் சம்பவிக்கும் இடைஞ்சல்களை உணர்ந்து தமது மக்களுக்காவது அறிவு புகட்ட முனையக்கூடும்.

நான்காவதாக, நம்மவர்களால் நடத்தப்படும் பொது விஷயங்களில்மட்டும் சிலர் கலந்து கொள்ளுகின்றனரே யன்றி பல வகுப்பினரும் சேர்ந்து நடத்தும் பொது ஸ்தாபனங்கள், கல்விக் கழகங்கள், பொருளாதாரச் சங்கங்கள், சமூக சீர்திருத்த இயக்கங்கள், தேசியக் கட்சிகள் ஆகியவற்றில் பங்கெடுத்துக்கொள்ளும் வழக்கம் நம்மவர்களில் பெரும்பாலோருக்கு இல்லை. இவ்வழக்க மிருக்குமாயின், வயது முதிர்ந்தவராயினும் அந்த வயதிலும் படித்துக்கொள்ள வேண்டுமென்ற தீவிர எண்ணம் தோன்றி படிக்க முயற்சி செய்யக்கூடும். இத்தகைய இன்னும் சில காரணங்களுஞ் சேர்ந்து நம்மவர்களின் கல்வி யபிவிருத்திக்கு முட்டுக்கட்டை வழங்குகின்றன.

சில ஆண்டுகளாக இக்குறைக ளனைத்தும் சிறிது சிறிதாக விலகி வருவது மகிழ்ச்சிக்குரியதாம்.

---

## கோவையில் ஒரு புதிய ஸ்தாபனம்

(ஒரு நிருபர்)

1913-ம் வருஷத்து இந்தியன் கம்பெனீஸ் ஆக்டுகளின் கீழ் "ஸ்ரீ சாரதாமில்ஸ், லிமிடெட்", என்ற பெயரால் ஒரு நூல் இயந்திரசாலை புதிதாக கோயமுத்தூர் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனி ரிஜிஸ்தரார் ஆபீசில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பரம்பரையாக பஞ்சு நூல், ஜவுளி வர்த்தகத்தி லீடுபட்டு போதுமான அனுபவம் வாய்ந்துள்ள செங்குந்த குலதிலகர்களான மகா-ா-ா-ஸ்ரீ V. S. செங்கோட்டையா & பிரதர்ஸ் அவர்கள் இந்தக்கம்பெனியின் மேனேஜிங் ஏஜெண்ட்ஸ் & செக்ரிடரீஸ்களாக நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். மில்லின் கட்டட வேலைகள் 6 மாத காலத்திற்குள் முடிந்து விடுமென்று நம்பப்படுகிறது. இப்போது பங்கு ஒன்றுக்கு 100-ரூபாய் கொண்ட 6000 சாதாரண பங்குகள் வெளியிடப்படும். பிரபல வர்த்தகர்களும் பொதுஜன சேவையில் ஆர்வமுள்ள பல செல்வாக்குள்ள கனவான்களும் இதன் டைரக்டர்களாக இருக்கிறார்கள். போத்தனூர் ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள இடத்தில் மில்லின் கட்டடங்கள் ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த ஸ்தாபனம் நல்ல லாபகரமாக வேலை செய்யக்கூடுமென்று நம்பப்படுவதோடு வேலையிழந்து தவிக்கும் பல தொழிலாளர்களுக்கு வேலையளித்து உதவக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பு:—பல அன்பர்களும் இதில் பங்குகள் எடுத்து கோயம்புத்தூர் மில்களுக்குள் இது சிறந்ததாகத் திகழவும், பங்குதாரர்கட்கு லாபம் அதிகமாய் பங்கிட்டுக்கரவும் துணைபுரியுமாறு விரும்புகிறோம்.

# வர்த்தமானம்

## சென்னை மார்க்கட்டு நிலவரம்

13—3—34

### நூல் தினுசுகள்

| நெ. | ராத்தல் | நூல் ரகம் | விலை |
|---|---|---|---|
| 40 | 5 | டாக்கிரி | ரூ. 3- 7-0 |
| ,, | 5 | சலவை எனிடிக்கட் | ரூ. 4- 2-6 |
| ,, | 5 | சலவை நாககன்னிகை | ரூ. 4- 5-0 |
| ,, | 10 | ஜப்பான் கலர் பந்து | ரூ. 6-10-6 |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 3- 4-0 |
| 30 | 5 | லாயல் மில் | ரூ. 2-11-0 |
| ,, | 5 | மதுரைமில் | ரூ. 2-13-0 |
| 20 | 10 | மதுரை மில் | ரூ. 4- 6-0 |
| 20 | 10 | ஸ்டேன்ஸ் மில் | ரூ. 4- 1-0 |
| 20 | 10 | லாயல் மில் | ரூ. 4- 2-0 |
| 60 | 5 | சீமை எருதுகாரம் | ரூ. 5- 7-0 |
| 60 | 5 | சிகப்பு அசல் மயில் | ரூ. 9-10-0 |

### ஜவுளிகளின் விலை

| | | |
|---|---|---|
| 22 × 22 காரிகன் மல் | கீரிப்பாம்பு (பி.) | ரூ. 6- 3-0 |
| ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5-10-0 |
| ,, சலவை மல் | கீரிப்பாம்பு | ரூ. 6-13-0 |
| ,, ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5- 7-0 |
| 1703-ம் நெம்பர் மல் | | ரூ. 9- 1-0 |
| 9000 கிளாஸ்கோ மல் | | ரூ. 9- 3-0 |

சவரன் 1-க்கு ரூ. 21- 7-0
வெள்ளி ரூபா எடை ரூ. 0- 9-6

### கப்பல் செய்திகள்

| | | | |
|---|---|---|---|
| S. S. அங்கோரா | ரங்கூனுக்கு | 16-3-34 | காலை 10 மணி |
| S. S. எரின்பூரா | ,, | 23-3-34 | ,, |
| S. S. ரோணா | ஸ்ட்ரெயிட்ஸ்-க்கு | 13-3-34 | மாலை 4 மணி |
| S. S. ரஜுலா | ,, | 27-3-34 | ,, |

## தமிழ் நாட்டு நடப்பு

### சனாதனிகள் மகாநாடு

தமிழ் ஜில்லாக்களின் சனாதனிகள் மகாநாடு மதுரையில் சென்ற மாதம் 17-ந் தேதி பூரி சங்கராச்சாரியார் தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டைக் கொல்லங்கோடு ராஜா ஆரம்பித்து வைத்தார். அவரது ஆரம்ப உரையில் 'புரட்சி இயக்கங்கள் தேசிய வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே அழித்து வருகின்றன. பிரம்ம சமாஜக்காரர், ஆரிய சமாஜக்காரர், சுயமரியாதைக்காரர், காந்தி கோஷ்டியினர்,



சமூக சீர்திருத்தக்காரர் ஆகியோர் தங்களுக்குள்ளே மாறுபட்டபோதிலும் சனாதன தர்மத்தை நாசம் செய்ய வேண்டுமென்ற பொது நோக்கம் உடையவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் முயற்சியை எதிர்ப்பதற்கு சனாதனிகள் ஆயத்தமாக இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஹபிபுல்லா திவான் பதவி ஏற்றார்

திருவனந்தபுரம் திவானாக நியமிக்கப் பெற்றுள்ள சர். மஹம்மது ஹபிபுல்லா சாகிப் இம்மாதம் 5-ந் தேதி பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் திருவனந்தபுரத்தில் மிக்க ஆடம்பரமாக வரவேற்கப்பட்டு வரவேற்புப் பத்திரமும் வழங்கப் பெற்றார்.

### கல்விப் பொருட் காட்சி

17-2-34-ந் தேதி தரங்கம்பாடியில் ஒரு கல்விப் பொருட்காட்சி நடைபெற்றது. அதில் அறிவை விளக்கும் பல சாமான்கள் வைக்கப்பட்டிருந்தனவாம்.

### 'பகுத்தறிவு' ஓர் தினசரிப் பத்திரிகை

ஈரோடு புரட்சி காரியாலயத்தார் தமது கொள்கையினை பரவச் செய்வதற்காக பகுத்தறிவு என்ற தமிழ் தினசரிப் பத்திரிகையை வெளியிடப் போகின்றனராம்.

### கோலார் தங்க வயல்

17-2-34-ந் தேதி காலை பம்பாய் தங்க சாலைக்கு கோலாரிலிருந்து கீழ்க்கண்ட தங்கம் அனுப்பப்பட்டுள்ளது.

மைசூர் சுரங்கம் ரூ. 3,61,983; சாம்பியன் சுரங்கம் ரூ. 2,40,238 உரிகம் சுரங்கம் ரூ. 1,94,564; நந்திதுருகம் சுரங்கம் ரூ. 4,99,577 ஆகமொத்தம் ரூ. 12,96,362.

### சேரிகளில் அம்மை குத்துதல்

சேரிகளில் 12 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் 4 அணாவும் கொடுத்து அம்மை குத்துவதென சென்னை கார்பொரேஷன் முடிவு செய்திருக்கிறது.

### காந்திஜி—அய்யங்கார் சந்திப்பு

தடியடி தர்பார் தொடங்கியவுடன் இருக்குமிடம் தெரியாமல் பரம சாதுவாய் மூலையில் அடங்கிக் கிடக்கும் ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்காரை அவரது புதல்வி அம்புஜம்மாள் வேண்டுகோட்படி ஸ்ரீ அய்யங்காரின் வீடு சென்று மகாத்மா சந்தித்துப் பேசினாராம்.

### சங்கரன்கோவில் தேவஸ்தானம்

டி தேவஸ்தானத்திற்கு மாதம் ரூ. 100 சம்பளத்தில் திரு. ஆறுமுகம் பிள்ளை சூபரிண்டெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### துவஜஸ்தம்பத்திற்கு பொன் முலாம்

டி கோயில் துவஜஸ்தம்பத்திற்கு பொன் முலாம் பூசுவதற்கு 9080 ரூபா அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

### சேலத்தில் தீவிபத்து

20-2-34 பகல் 2 மணிக்கு சேலம் மேட்டுத் தெரு பிராமணான

கட்டிடத்துக்கு பின்புறமுள்ள 8 கூரை வீடுகள் தீப்பிடித்து சாம்பலாயின.

### ஹைகோர்ட்டின் புதிய நீதிபதி

சென்னை ஹைகோர்ட்டில் சர். சி. வி. அனந்த கிருஷ்ணய்யர் வேலையிலிருந்து விலகிக்கொள்வதால் அவருக்குப் பதிலாக ராவ்பகதூர் எஸ். வரதாச்சாரியார் நியமிக்கப்பட்டு 5-3-34-ல் பதவி ஏற்றுக் கொண்டார்.

### ஆலயப் பிரவேசத்திற்கு ஆட்சேபனை

ஆலயப் பிரவேச மசோதாவை ஆட்சேபித்து, அது மதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் விரோதமென்றும் அதை சட்டமாக்கக் கூடாதென்றும் ஒரு மகஜர், திருச்செங்கோடு பிரபல வர்த்தகரும், செங்குந்தர் நாட்டாண்மையாளருமான திரு. கூ. அ. சு. அருணாசல முதலியார் 254 கை யொப்பங்கள் வரை வாங்கி தாசில்தாரிடம் 6-2-34-ல் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

### அதிசய பிறவி

ஆழ்வார் திருநகரிக்குச் சமீபமாயுள்ள கிராமமொன்றில் ஓர் பசு கன்று போட்டபோது இரண்டு குட்டிகள் முதுகில் வளர்ந்திருந்த ஒரு சதையினால் ஒன்றாய்ச் சேர்ந்தபடி பிறந்திருப்பதாகவும், இரண்டும் ஒன்றாக தாய்ப் பசுவினிடம் பால் அருந்துவதாகவும், அதை பல கிராமத்திலிருந்து ஜனங்கள் வந்து வேடிக்கை பார்ப்பதாகவும் தெரிகிறது.

### அண்ணாமலைக் கழக பேராசிரியர் நியமனம்

மகிபாலன்பட்டி, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக 5-2-34 முதல் நியமிக்கப்பட் டிருக்கிறார்.

### பரத்தை, பிராம்மண ஸ்திரீயானாள்

சென்னை, அட்வகேட் திரு. சேஷகிரி ராவ் தனது மைத்துனியின் புதல்வி என்று சொல்லி ஜானகி என்ற பெண்ணை திரு. பி. எஸ். அய்யருக்கு மணஞ் செய்து கொடுத்தார். பின்பு ஜானகி ஓர் தாசி வகுப்பைச் சேர்ந்தவள் எனத் தெரிந்து பி. எஸ். அய்யர் வழக்குத் தொடுக்க அட்வகேட் சேஷகிரிராவுக்கு 3200 அபராதம் விதிக்கப் பட்டிருக்கிறது. இவர் அப்பீல் செய்வாரெனத் தெரிகிறது.

### கார்பொரேஷன் தீர்மானம்

வைசராய், மாகாண கவர்னர்கள், நகர மேயர்கள், பிரபல அகில இந்திய தேசீயத் தலைவர்கள் ஆகிய இவர்களுக்கு மட்டுமே சென்னை கார்பொரேஷன் உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கலாம் என ஸ்ரீ ஜி. ரங்கைய நாயுடு கார்பொரேஷன் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று கொண்டுவந் திருக்கிறார்.

### பிரேத பார்சல்

திரவியம் என்பவனால் அரக்கோணத்திலுள்ள சர்க்கார் தந்தி இலாகா சூபரின்டெண்டு தர்மகண்ணு என்பவருக்கு 22-2-34-ல் மதுரையி லிருந்து ஒரு பார்சல் அனுப்பப்பட்டது. விலாசதாரிட மிருந்து



$7\frac{1}{2}$ ரூ. வாங்கிக் கொள்ளும்படி 'டுபே'யில் அனுப்பப்பட்டது. விழுப்புரம் ஸ்டேஷனில் பார்சலிலிருந்து அதிக நாற்றம் வந்ததனால் அதைப் பிரித்துப் பார்த்தபோது 35 வயதுள்ள ஒரு பெண் பிரேதம் இருக்கக் கண்டனர்.

### நிலங்களை யெல்லாம் சர்க்கார் எடுத்துக் கொள்ளட்டும்

குடந்தை தாலூக்கா மிராசுதாரர்கள் மகாநாடு 22-2-34-ந் தேதி கும்பகோணத்தில் நகரத்தலைவர் திரு. ஆர். கந்தசாமி மூப்பனார் தலைமையில் கூடியது. அச்சமயம் ஸ்ரீ வி. கிருஷ்ணையர் தமது உபந்யாசத்தில் குறிப்பிட்டது மிகவும் கவனிக்கத்தக்க விஷயமாகும். அவர் குறிப்பிட்டதாவது :—இப்போதைய நிலையில் மிராசுதார்களுக்கு 100-க்கு 50 வீதம் வரியைக் குறைத்தாலும் அதனால் அவர்கள் சீர்பட முடியாது. ஏதோ ஓர் வகையில் அவர்களுக்குச் சிறிது உபகாரமாக இருக்கலாம். புஞ்சையோடு கூடிய கிராமங்களைக் காட்டிலும் நஞ்சைமட்டுமுள்ள கிராமங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. நஞ்சை நிலம் வைத்திருப்போர் தற்போது மிகவும் கடன்காரர்களாகவேண்டி இருக்கிறது. நெல் கலம் ரூபா $1\frac{1}{2}$-க்குக் குறைவில்லாமல் விற்றால் தான் எரு, வாய்தா முதலிய செலவுக்கேனும் சரியாகப் போகக் கூடும். அந்த விலை வருகிறவரையில் சர்க்கார் வரியை 100-க்கு 50-க்கு மேலும் குறைத்துக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்கு சம்மதமில்லையாயின் கலம் $1\frac{1}{2}$ ரூபா விற்கிறவரையில் நிலங்களை சர்க்காரே கைப்பற்றி அனுபவிப்பதில் என்னைப் பொறுத்த வரையில் ஆட்சேபனை இல்லை' எனக் குறிப்பிட்டார்.

### ஒட்டிப் பிறந்த குழந்தைகள்

திருச்சி தையற்காரத் தெருவில் ஒரு பெண் மூன்று குழந்தைகளைப் பெற்றாள். அவற்றுள் இரண்டு குழந்தைகள் இடையில் ஒட்டிக்கொண் டிருந்தன. மூன்றாவது குழந்தை தனித்துப் பிறந்தது. மூன்று குழந்தைகளும் தாயும் சிறிது நேரத்தில் இறந்துவிட்டனராம்.

### சயாம் அரிசி இறக்குமதி

ஸயாமிலிருந்து ஜப்பானியக் கப்பல் 26-2-34-ந் தேதி மறுபடியும் 3000 டன் (சுமார் 32,000 மூட்டைகள்) அரிசியை சென்னையில் இறக்குமதி செய்திருக்கிறது. சென்ற பிப்ரவரி 14-ந் தேதி ஒரு கப்பல் 2000 டன் அரிசியை சென்னையில் இறக்குமதி செய்தது. 20-ந் தேதி யன்று ஒரு கப்பல் 8000 டன் அரிசியுடன் வந்து 1000 டன் அரிசியை சென்னை கடற்கரையிலும், மற்றதை கூடலூர், நாகப்பட்டணம், கொச்சி, கள்ளிக்கோட்டை, கொழும்பு இவ்விடங்களிலும் இறக்குமதி செய்திருக்கிறது. அடுத்த சில மாதங்களில் வாராவாரம் இவ்வாறு ஸயாம் அரிசி சென்னையில் இறக்குமதி செய்யப்பட்டு வரலாமெனத் தெரிகிறது.

### இனாம்தார்கள் கவர்னரிடம் தூது

சென்னை மாகாண இனாம்தார்கள் ஒரு தூது கோஷ்டியினராய் சர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் தலைமையில் சென்று, சென்னை கவர்னரைப் பேட்டி கண்டு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட எஸ்டேட் திருத்த மசோதாவினால் இனாம்தார்களுக்கு நேரக்கூடிய கஷ்டங்களை விளக்கிக் கூறினராம்.

### நகரசபைகளுக்கு கமிஷனர்

சென்னை மாகாணத்தில் இதுவரை 26 முனிசிபல் சபைகளுக்கு சர்க்கார் கமிஷனரை நியமித் திருக்கின்றனர்.

### சிதம்பரம், கூடலூர் தாலூக்காக்களுக்கு வரிவஜா

சென்ற டிஸம்பர் மாதம் புயற்காற்றினல் அதிக சேதமுற்ற கூடலூர் சிதம்பரம் தாலூக்காக்களின் பகுதிகளில் அரைக்கால் விளைவிற்குமேல் கண்டு முதலாகாத நிலங்களுக்கு பூரணமாய் வரி வஜா செய்யவும், அதற்குமேல் கண்டு முதலாகிய நிலங்களுக்கு மூன்றிலொரு பாகம் தீர்வை வசூலிக்கும் படிக்கும் சென்னை அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. மற்றும் அதிக சேதமுற்ற விருத்தாசலம், விழுப்புரம், தாலூக்காக்களுக்கும், திண்டிவனம் தாலூக்காவில் ஒரு கிராமத்திற்கும் மேற்கண்டபடி வரிவஜா செய்யப்படும்.

### ஸ்பெஷல் ஆபீசர் நியமனம்

தாலூக்கா போர்டுகளின் ரத்து மசோதாவை அமுலுக்குக் கொண்டு வருவதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய மாதம் 1-க்கு ரூ. 1000 சம்பளத்தில் 6 மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள ஸ்பெஷல் ஆபீஸர் 1-3-34-ல் பதவி ஏற்றார். அவருக்கென்று சில சிப்பந்திகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவருடைய மதுரை ஜில்லா போர்டு தலைவர் பதவியும், சென்னை சட்டசபை நியமன அங்கத்தினர் பதவியும் காலியாகி விட்டதாயினும் மீண்டும் சட்டசபை மெம்பராக சென்னை சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். தாலூக்கா போர்டுகளிலுள்ள குமாஸ்தாக்களை என்ன செய்வதென்பதைப்பற்றி தற்போது தாலூக்கா, ஜில்லா போர்டு தலைவர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறார்.

### சென்னை சர்க்கார் வரவு செலவு திட்டம்

இம்மாதம் 10-ந்தேதி முதல் 11 நாட்களுக்கு சென்னை சட்டசபையில் வரவு செலவு விவாதம் நடைபெறும். செலவினங்களைக் குறைக்க வேண்டுமென 1588 பிரேரணைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

### சுங்கச் சாவடி மசோதா

இதனை அநேக ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்களே எதிர்ப்பதால் அடுத்த கூட்டத்தில் கொண்டுவரப்படமாட்டாதெனத் தெரிகிறது. இம்மசோதா ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட வேண்டுமென ஸ்ரீ பஷீர் அஹமது ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்.

---

## இந்தியச் செய்தி

பண்டித ஜவஹர்லாலுக்கு 2 வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது பண்டிதர் கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலம் அவரது தேசபற்றின் பெருமையை நன்கு விளக்குகின்றது. வாக்குமூலத்தின் சுருக்கம் வருமாறு:—"அந்நியர் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுபட்டு சுயேச்சை பெறவேண்டுமெனக் கூறுவது ராஜநிந்தனை யாகுமாயின், எனது உபந்யாசமே யன்றி எனது செயலனைத்தும் ராஜநிந்தனை யுடையனவே யாகும். அந்நியர் ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற நான் மிகவும் முயன்று வருகிறேன். பிரிட்டிஷ் ஆதிக்கம் இருக்கும் வரையில் இந்தியாவுக்கு ஒருக்காலும் விமோசனம் ஏற்படப்போவதில்லை. அந்த ஆதிக்கத்தை நீக்கவேண்டுமென பொது மக்களுக்கு அறிவுறுத்துவது ராஜநிந்தனை யாகுமானல் நான் நெடுநாளாக ராஜநிந்தனை செய்து வருபவனே யாகும்.



வங்க சர்க்கார் என்மீது நடவடிக்கை மேற்கொண்டதற்கு அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். தனிப்பட்டவர்கள் சில சமயங்களில் ஒழுங்கில்லாமல் நடப்பதுண்டு. ஒழுங்கையே அடிப்படையாகக் கொண்ட சர்க்கார் தனிப்பட்டவர்களைப் போல ஆத்திரத்துடன் காரியங்களைச் செய்வது மிகவும் கொடியதாகும். சர்க்கார் மிருகத்தனமாகவும் பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மையுடனும் நடந்து கொள்வது கொடுமையினும் கொடுமையல்லவா?"

இந்த சமயத்தில் கோர்ட்டிலும் ராஜத்துவேஷமாகப் பேசுவதாக பிராசிகூஷன் தரப்பில் கூறப்படவே மாஜிஸ்டிரேட் அதற்கு மேல் பேசக் கூடாதென உத்தரவிட்டார்.

### பூகம்ப நாசமும், நிவாரண வேலையும்

மாங்கீர், முஸாபர்பூர், சீதாபர்ஹி முதலிய இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிய பாபு ராஜேந்திர பிரசாத் அறிவிப்பதாவது:—

'விளைநிலங்கள் முற்றும் அகோர நாசம் அடைந்திருக்கிறது. மனித முயற்சியால் சீக்கிரம் பழுது பார்க்கக் கூடுமெனத் தோன்றவில்லை. கால்வாய்களிலும், ஆறுகளிலும் மணல் மேடு மிகுந்திருப்பதால் அவற்றின் நீர் விளைநிலங்களில் பாய்ந்து தேங்கியிருக்கிறது.

வட பீகாரில் மட்டும் 67000 வீடுகள் அழிந்துபோயின. 12 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தற்காலிகமாக வீடு வசதிகள் செய்துகொடுக்க ஒரு கோடி ரூபாய் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

முசாபர்பூருக்கும் சீதாபர்ஹிக்கு மிடையிலுள்ள கிராமங்களில் சுமார் 15 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பாகம் பூமிக்குள்ளிருந்து வெளி வந்த அசுத்த நீரினல் நிரம்பியுள்ளது. ஒரு ஜில்லாவில் மட்டும் ஆயிரக் கணக்கான வெடிப்புகள் ஏற்பட்டு மணல் மேடுகள் மலை போல் வெளி வந்திருக்கின்றன. பல வர்ணமுள்ள மண்ணும் கந்தக நீரும் எங்கும் காணப்படுகிறது. காடுகள் பல அழிந்து மரங்கள் மண்ணில் புதைந்துள்ளன.

மாங்கீரில் ரோட்டுகள் அமைக்கவும், வீட்டு வசதி செய்து தரவும் 50000 ரூபாயும், நாசமடைந்த கட்டடங்களிலுள்ள சாமான்களை புதிய இடங்களுக்குக் கொண்டுபோக 10000 ரூபாயும், குடிசைகள் கட்டுவதற்கு 66000 ரூபாயும் உதவி செய்யப்பட்டிருப்பதோடு கரும்புத் தோட்டங்களில் பயிராகும் கரும்புகளை அறைக்க ஆயிரம் ஆலைகள் பீகார் மாகாண சர்க்காரால் பகல்பூருக்கு மட்டும் உதவப்பட்டிருக்கின்றன. பூகம்பத்தால் நாசமடைந்த ஒவ்வொரு ஜில்லாவுக்கும் நிவாரண வேலைக்காக அதன் கலெக்டரிடம் 25000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேபாளத்தில் வெய்யிலில் வதையும் ஜனங்களுக்கு

கொட்டாய்கள் அமைத்துத் தர தகடுகள் வாங்குவதற்கு மட்டும் ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது.

பூகம்ப அதிர்ச்சியால் பெரிய கட்டடமனைத்தும் சேதமுற்றன வாயினும் தேவாலயங்களுக்குப் பழுதேற்படவில்லையாம்

பூகம்ப கஷ்ட நிவாரணத்திற்கென திரட்டப்படும் பாபு ராஜேந்திர பிரசாத் நிதிக்கு 20,55,095 ரூபாயும், வைசராய் நிதிக்கு 29,46,140 ரூபாயும் இது வரை சேர்ந்திருக்கிறது.

## மந்திரிகள் மீது நம்பிக்கையற்ற தீர்மானம்

பர்மா சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் 20-2-34-ந் தேதி விவாதிக்கப்பட்டு 49 பேர் சாதகமாகவும் 47 பேர் பாதகமாகவும் ஓட்டுத் தர அது நிறைவேறிவிட்டது. மந்திரிகளும் மறு நாள் தமது பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டனர்.

## வங்க சர்க்காரின் யதேச்சாதிகாரம்

ஆயுத வெடிமருந்துச் சட்டங்களின்படி குற்றம் செய்வோருக்கு மரண தண்டனை விதிப்பதற்காக 5-3-34-ல் விவாதம் துவங்கிய வின் மசோதா சம்பந்தமாக 275 திருத்தங்கள் வந்துள்ளன.

## விமானம் விழுந்து நொறுங்கியது

பாரிசிலிருந்து வந்துகொண்டிருந்த பிரெஞ்சு ஆகாய விமானம் வங்காளத்திற்குச் சமீபத்தில் கீழே விழுந்து நொறுங்கியது. பருந்துகள் விமானத்தைத் தாக்கியதால் கீழே இறக்க முயற்சித்தபோது தீப் பற்றிக்கொண்டு விழுந்து நொறுங்கியதெனத் தெரிகிறது.

## சென்னை கவர்னரின் வைசராய் பதவி

சென்னை கவர்னர் மேஸ் 16உ டில்லிக்குச் சென்று வைசராயைச் சந்தித்த பின் வைசராய் லார்டு வில்லிங்டன் அன்றே விமான மூலம் இங்கிலாந்துக்குப் பிரயாணமாவார். அவர் பிரயாணப்பட்டதும் சென்னை கவர்னர் வைசராய் பதவி ஏற்பார். 17உயன்று சர். மகமது உஸ்மான் உதகமண்டலத்தில் சென்னை கவர்னர் பதவியை ஏற்றுக்கொள்ளுவார். வைசராய் 3 மாத விடுமுறையில் இங்கிலாந்து செல்வதை ஒட்டி இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

## இந்தியா சட்ட சபையின் ஆயுள்

தற்போதுள்ள வாக்குரிமையின்படியே இந்தியா சட்ட சபையின் வாக்காளர் ஜாபிதாவை ஜூலை மாத இறுதிக்குள் தயாரிக்கும்படி மாகாண சர்க்கார்களுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் லார்டு வில்லிங்டன் தமது ரஜாக் காலம் முடிந்து ஆகஸ்டு மாதத்தில் இங்கிலாந்திலிருந்து திரும்பியவுடன் இந்தியா சட்ட சபையைக் கலைக்குமாறு உத்தரவிடுவாரென்றும் தெரிகிறது.

## பம்பாய் போலீஸ் செலவு

பம்பாய் மாகாணத்தில் 1932.33-ம் ஆண்டில் சாதாரண போலீசாருக்கு 98,52,000 ரூபாயும் ரகசிய போலீஸாருக்கு 7,69,657 ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது.



## இந்திய சர்க்கார் வரவு செலவு

இந்தியா சட்ட சபையில் இந்திய அரசாங்க பொக்கிஷ மந்திரி சர். ஜார்ஜ் சூஸ்டர் சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தின்படி 1934-35-வது வருடத்திற்கு சர்க்கார் வருமானம் 7808 லட்சம் ரூபாயும் செலவு 7961 லட்ச ரூபாயும் இருக்குமாம். எனவே இவ் வருஷம் 153 லட்சம் ரூபாய் இந்திய சர்க்காருக்குத் துண்டு விழுகிறது. இதனை முதல் தர புகையிலைக்கு பவுண்டு 1-க்கு 32-6-0 வீதமும், இரண்டாந் தரத்திற்கு 31-14-0 வீதமும் வரி விதிப்பதாலும், சுருட்டு, தீக்குச்சி, சர்க்கரை முதலியவற்றிற்கு அதிக வரி விதிப்பதாலும் ஈடு செய்யப்படும்.

## சர்வகலாசாலைகள் மகாநாடு

இம் மாதம் 6, 7, 8 தேதிகளில் சர்வகலாசாலைகளின் மகாநாடு புது டில்லியில் நடைபெற்றது. வைசராய் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

---

# வெளியுலகச் செய்தி

## இளவரசர்கட்கு ஜென்ம தண்டனை

சயாம் சர்க்காரை வீழ்த்த புரட்சி செய்தது சம்பந்தமாக அந்நாட்டு மன்னரின் உறவினர்களான இரு இளவரசர்கட்கு ஜென்ம தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரிய சர்க்காருக்கும் சம தர்ம வாதிகளுக்கும் பெரிய கலகம் ஒன்று நடந்தது. முடிவில் சர்க்காரே வெற்றி பெற்றனர். இக் கலகத்தில் 200 சோல்ஜர்களும் 1700 சம தர்ம வாதிகளும் இறந்துவிட்டனர். சமதர்மவாதிகள் மீண்டும் போராட்டம் செய்ய ஆயத்தப்படுத்தி வருகின்றனராம்.

இந்த சமதர்மவாதிகளுக்கு அநுதாபம் காட்டும் பொருட்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரிலுள்ள சமதர்மக் கட்சியினர் ஒரு பொதுக் கூட்டம் கூட்டினர். ஆனால் அது பெருங் குழப்பத்தில் முடிவுற்றது.

பெல்ஜியம் மன்னர் ஆல்பர்ட் 18-2-34-ந் தேதி மோட்டார் விபத்தினால் மரணமடைந்தார். அவர் மரணத்தைக் குறித்து துக்கப்படாத ஐரோப்பா வாசிகள் இல்லை எனச் சொல்லலாம். அவரது மரணத்தைப் பற்றி ஜார்ஜ் மன்னர் பெல்ஜியம் இளவரசருக்கு அனுப்பிய அநுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள மக்களனைவரும் உங்கள் தந்தையின் வீரத்தை என்றும் மறக்க முடியாது. அவரது வீர சொரூபம் எங்கள் உள்ளத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். சென்ற மகா யுத்தத்தின்போது, ஐரோப்பாவை யுத்த மேகம் சூழ்ந்துகொண்டிருந்தபோது உங்கள் தந்தையின் வீரமும், தைரியமும் நேசக் கட்சியினருக்குப் பெரிதும் உற்சாகமூட்டியது. அந்த உத்தம நண்பரை இழந்ததற்கு பிரிட்டிஷ் மக்களனைவரும் வருந்துவார்களென்பதில் ஐயமில்லை."

பிரிட்டிஷ் இளவரசர் ஜார்ஜ் மன்னரின் பிரதிநிதியாக பெல்ஜியம் சென்று வந்தார்.

காலஞ் சென்ற பெல்ஜியம் மன்னர் ஒரு மன்னராக வாழாமல் தமது குடிகளில் ஒருவராய் அவர்களது நலமே தனது நலனாய் வாழ்ந்தவர். சத்தியத்திற்கு சற்றும் பிறழா நெறியுடையவர். டாம்பீகம் அவரைப் பார்த்தால் வெருண்டோடும். இவரும் இவரது பத்தினியார் எலிஜபெத் மகாராணியாரும் என்றும் சாதாரண வாழ்க்கையே நடத்தினர். மக்கள் குறைகளை இருவரும் நேரிலேயே கவனிப்பது வழக்கம். தன் சொந்த தந்தையைப் பறிகொடுத்த தனயனைப்போல் பெல்ஜியம் மக்களில் அநேகர் இம் மன்னரின் மரணத்திற்காகக் கண்ணீர் வடித்து வருந்தியிருக்கிறார்கள்.

## பார்லிமெண்டு மெம்பர்களின் மாறு வேடம்

5 டோரி பார்லிமெண்டு அங்கத்தினர்கள் மாறு வேடம் பூண்டு இந்தியாவின் நிலைமையை அறிய வந்திருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் யாரென்பதைக் காட்டிக்கொள்ளாமலே இந்தியர் பலரைச் சந்தித்து விஷயங்களை அறிந்துகொண்டு போய் பார்லிமெண்டில் இந்திய சீர்திருத்த மசோதா வரும்போது அதை எதிர்த்துப் பேசுவார்களாம்.

## ஜேர்மன் தேவாலயங்கள்

ஜெர்மனியிலுள்ள எல்லா தேவாலயங்களையும் ஹிட்லர் கட்சியார் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். மீறி நடக்கும் பிஷப்புகள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இந்திய அரசியல் ரிபோர்ட்

இந்திய அரசியல் ஜாயிண்டு கமிட்டியார் சீர் திருத்த மசோதா சம்பந்தமாக சேகரஞ் செய்த சாட்சிகள் 2399 பக்கங்கள் கொண்ட 3 புத்தகங்களாக வெளி வந்துள்ளன. இதுவரை செலக்டு கமிட்டி சம்பந்தமாக 24,797 பவுன் செலவாகியிருக்கிறது. ரிபோர்ட் விற்பனைக்காகத் தயாராக இருக்கிறதாம். இதன் விலை 3 பவுன் 10 ஷில்லிங்.

## புது வருடக் கோண்டாட்டம் கூடாது

வருஷப் பிறப்புக்கு 3 வாரம் முன்னதாக சீன அரசாங்கத்தார் புது வருட வாழ்த்துக் கடிதங்கள், கார்டுகள், வாழ்த்துத் தந்திச் செய்திகள் இவைகள் பறிமுதல் செய்யப்படுமென்றும், வருடப் பிறப்பு விழா கொண்டாடக் கூடாதென்றும் அறிவித்துள்ளனர்.

## அதிகாரிகளே மண்வெட்டியால் வேலை செய்கின்றனர்

பூகம்ப அதிர்ச்சியால் கண்டக நதியின் கரைகள் சேதமாகியிருக்கிறது. அதைப் பழுது பார்ப்பதற்காக நிவாரண கமிட்டித் தொண்டர்களும், சரண் ஜில்லா அதிகாரிகளும் 25-2-33 காலை நதியின் கரைக்கு வந்தனர். ஜில்லா மாஜிஸ்டிரேட்டு திரு. பி. கே. பிள்ளை, டாக்டர் மகம்மது, ஜில்லா ஜட்ஜ் திரு. ஸ். கே. தாஸ், ஜில்லா சூபரிண்டெண்டு ஜனாப் எ. ஹமீது, உதவி மாஜிஸ்டிரேட் மணிபூஷன் முகர்ஜி முதலியோர் மண்வெட்டியால் வேலை செய்யத் துவங்கினர். அதைப் பின் பற்றி தொண்டர்களும் வேலை செய்தனராம். பின்பு கிராம வாசிகள் பலரும் வந்து அவர்களுக்கு உதவியாக வேலை செய்தனர்.

# நேயர்கள் கடிதம்

## இலங்கை அபிமானி எழுதுவது

ஐயா !

சென்ற வெளியீட்டில் இந்திய, இலங்கைச் செங்குந்தர் ஒற்றுமை விஷயமாக ஸ்ரீமான் வா. பொன்னம்பலம் அவர்கள் கேட்டுள்ள சில கேள்விகளையும், அவற்றிற்குத் தாங்கள் விடுத்துள்ள விடைகளையும் அனேகர் வாசித்துச் சந்தோஷமடைந்திருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. திரு. பொன்னம்பலம் போன்ற சில அபிமானிகள் இலங்கையிலும் இருக்கத் தவறவில்லை; ஆனால் முன் வருவதில் பின்னிற்கின்றனர். நமது குல முன்னேற்றத்தில் இதுவே முதற்சத்துருவாய் நிற்கிறது.

வட இலங்கைச் செங்குந்த மஹாஜன சங்கத்தின் 2-வது மகாநாட்டில் தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கப் பிரதிநிதிகளாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியாரும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரும் காட்டிக்கொடுத்த முன்மாதிரியை இலங்கைச் செங்குந்தரனைவரும், மேலாக வடஇலங்கைச் செங்குந்த மஹாஜன சங்கத் தலைவர்களும் பின்பற்ற வேண்டியது இன்றியமையாதது. இலங்கையிலிருந்து இந்திய மகா நாடுகளுக்கும், இந்தியாவிலிருந்து இலங்கை மகாநாடுகளுக்கும் பரிசனம் செய்வது மிகவும் சிரமமே. உதாரணமாக: வட இலங்கைச் செங்குந்தர் 2-வது மகாநாட்டிற்கு பல (சுமார் 10) இந்தியச் சகோதரர்கள் வருவதாக, ஒருவருட காலம் வாக்களித்து, இறுதியில் இந்திய சங்கப் பிரதிநிதியாக திரு. மாணிக்கவாசக முதலியாரை மாத்திரம் அனுப்பியிருந்தனர். இதற்கிடையில் வரும் அனைவரையும் வரவேற்பதற்கு ஆயத்தங்களெல்லாம் நடைபெற்று வந்தன. விசுவாச பங்கம் ஏற்படா வண்ணம் ஷை சங்கத்தார் இருவரைச் சென்னைக்கு அனுப்பி அதிக செலவோடும் கஷ்டத்தோடும் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரை அழைத்துவர வேண்டியதாயிற்று. இதன் காரணங்களாக எல்லா ஆயத்தங்களும் வீணானதுமன்றி மகாநாட்டைத் தவணைபோடவும் நேரிட்டது. முடிவில் மகாநாடு எண்ணியிருந்தபடி நிறைவேறாதிருந்ததுமல்லாமல் வந்த பிரதிநிதிகளுக்குத்தந்த வரவேற்பு அளிக்கமுடியாமலும் விட்டது! இதிலிருந்து அபிமானமுள்ளவர்களுக்கே இந்நோக்கத்தில் உதவி செய்ய இடையூறுகள் ஏற்பட்டு விடுகிறதாக அறியவேண்டியிருக்கிறது. அதோடு வசதியுள்ளவர்கள் அபிமானமற்றிருப்பதை மிகவும் துக்கத்துடன் அறிகின்றோம். ஆனால் இருபக்கத்தோரும் இவ்விஷயத்திற்கு இயன்றவரைகளும் முயற்சித்து உதவிபுரிய வேண்டியது கடமையாகும்.

நமது 5-வது மகாநாடு சமீபத்தில் நடைபெறுமென தெரிவிக்கின்றீர்கள். அப்படியானால் இலங்கைச் செங்குந்தர்களும் சேர்ந்து இம்மகாநாட்டை சிறப்பிப்பார்களே யானால் இலங்கைச் செங்குந்தர் இந்தியச் சகோதரர்களுக்குத் தங்கள் நன்றி யறிதலைத் தெரிவிக்கக்

## கிளர்ச்சி

காஞ்சீபுரம், அய்யங்கார் பாளையம்
செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம்

### இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

ஷை சங்கத்தின் இரண்டாவது வருடப் பூர்த்திவிழா, ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் 22-ம் நாள் (4-2-34) ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு திரு. K. வஜ்ஜிரவேல் முதலியார் B. A., L. T., அவர்கள் அக்கிராசனத்தில் நடைபெற்றது.

கடவுள் வணக்கம் திரு. S. கண்ணப்பனால் பாடப் பெற்றதும், சென்ற வருடத்தின் அறிக்கையை காரியதரிசியவர்கள் வாசித்தனர். அக்கிராசனரின் முன்னுரையின் பின், "நமது கடமை" என்பது பற்றித் திருவாளர் V. திருஞான சம்பந்த முதலியார், தமிழ்ப் பண்டிதர், (P. H. School, Conjeeveram) அவர்களும், "நமது நிலைமை" யைப்பற்றித் திரு C. பக்கிரிசாமி முதலியாரவர்களும், "கட்டாயப் படிப்பும் அதன் அவசியமும்" என்பது பற்றித் திரு D. C. கந்தசாமி முதலியாரவர்களும் சொற்பொழி வாற்றினார்கள். பிறகு 'இளைஞர்களின் சொற்பொழிவுகள்' என்ற தலைப்பின்கீழ் "இளைஞர்கள்", "தமிழின் தற்கால நிலை" என்பது பற்றி முறையே திருவாளர்கள் R. வீரபத்திரனும், M. சண்முகசுந்தரமும் உபந்நியசித்தனர்.

பின்பு அக்கிராசனர் தமது முடிவுரையில் தற்கால நிலைமை, நாம் செய்யவேண்டுவது, கல்வியின் அவசியம், இளைஞர்களின் முயற்சி பெரியோர்களின் கடமை, முதலியவைகளைப் பற்றிச் சொற்பெருக்கு நிகழ்த்திய பின், காரியதரிசியவர்களால் சபையோருக்கும், அக்கிராசனருக்கும், ஏனையோருக்கும் வந்தன உபசாரம் கூறப்பட்டதும் ஆண்டு விழா இரவு 9½-மணிக்கு இனிது நிறைவேறியது.

R. வீரபத்திர முதலியார்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொள்வதுமல்லாமல், வீணே நினைத்துக் களிக்கும் அபிமானத்தையும், ஒற்றுமையின் ஆவலையும் காட்டுகிறவராவார்கள்.

ஸ்ரீமான் பொன்னம்பலம் அவர்கள் இவ்விஷயத்தை விசாரணைக்குக் கொண்டுவந்ததற்காகவும், மித்திரன் ஆசிரியர் அவர்கள் அதற்குத் தகுந்தபடி விடையிறுத்து உண்மையினை வெளிப்படுத்தியதற்காகவும் இருவருக்கும் மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

208143

### 1934-ம் ஆண்டு ஜனவரி முதல் சந்தா வசூல்

**சென்னை**

| | |
|---|---|
| ச. தட்சிணாமூர்த்தி முதலியார் | ரூ. 1 8 0 |

#### செங்கற்பட்டு ஜில்லா

**திருக்கழுக்குன்றம்**

| | |
|---|---|
| அ. மலைமருந்து முதலியார் | 4 8 0 |

**மானம்பதி**

| | |
|---|---|
| அ. துரைசாமி முதலியார் | 4 8 0 |

**மணிமங்கலம்**

| | |
|---|---|
| C. N. கிருஷ்ணசாமி முதலியார் | 1 8 0 |
| ந. மு. வைத்தியலிங்க முதலியார் | 1 8 0 |
| கோ. சுப்பராய முதலியார் | 1 8 0 |
| பெ. கந்தசாமி முதலியார் | 8 0 0 |

**செய்யூர்**

| | |
|---|---|
| S. வீராசாமி முதலியார் | 3 0 0 |

#### வடாற்காடு ஜில்லா

**கலவை**

| | |
|---|---|
| எ. முனிசாமி முதலியார் | 4 0 0 |
| கு. அ. அண்ணாமலை முதலியார் | 2 0 0 |

**நாராயணவரம்**

| | |
|---|---|
| முனிப்புலி, செங்கழநி முதலியார் | 1 8 0 |

#### தென்னாற்காடு ஜில்லா

**ஆதூர்**

| | |
|---|---|
| ச. கா. பட்டு முதலியார் | 0 8 0 |

**T. புதுப்பாளையம்**

| | |
|---|---|
| மு. அ. கிருஷ்ணசாமி முதலியார் | 1 8 0 |
| முத்தி, குழந்தைவேலு முதலியார் | 8 0 0 |
| தி. கு. சின்னசாமி முதலியார் | 1 8 0 |
| சி. வைத்தியலிங்க முதலியார் | 0 8 0 |

**சின்னதச்சூர்**

| | |
|---|---|
| சு. வேலாயுத முதலியார் | 1 8 0 |

**மேல்பட்டாம்பாக்கம்.**

| | |
|---|---|
| தி. அண்ணாமலை முதலியார் | 1 8 0 |
| ஆ. வே. துரைசாமி முதலியார் | 1 8 0 |
| ந. ரத்தின முதலியார் | 1 8 0 |
| நாட். துரைசாமி முதலியார் | 1 8 0 |
| சோமசுந்திர முதலியார் | 1 8 0 |
| சோலை, கு. சோ. பழநியப்ப முதலியார் | 1 8 0 |

**கல்லாலம்பூண்டி**

| | |
|---|---|
| சே அ. வீராசாமி முதலியார் | 1 0 0 |

**அண்ணாமலைநகர்**

| | |
|---|---|
| N. சீனிவாச முதலியார் | 1 8 0 |

#### தஞ்சாவூர் ஜில்லா

**கோரநாடு**

| | |
|---|---|
| T. வைத்தியலிங்க முதலியார் | 1 8 0 |

**அம்மாபேட்டை**

| | |
|---|---|
| [illegible] சம்பந்தமூர்த்தி முதலியார் | 4 8 0 |
| [illegible] இரத்தினசாமிமுதலியார் | 1 8 0 |

**Regd. No. M. 1514**

| | | | |
|---|---|---|---|
| **மன்னார்குடி** | | | |
| பெரி. ரும. நடராஜ முதலியார் | 8 | 0 | 0 |
| சி. த. காளிமுத்து முதலியார் | 3 | 0 | 0 |
| **மதுரை ஜில்லா** | | | |
| **ஒட்டன்சத்திரம்** | | | |
| K. நல்லைய முதலியார் | 1 | 8 | 0 |
| **திருநெல்வேலி ஜில்லா** | | | |
| **சிந்தாமணி** | | | |
| பா. நயினார் முதலியார் | 8 | 0 | 0 |
| கு. தி. இராமசாமி முதலியார் | 8 | 0 | 0 |
| **கோயமுத்தூர் ஜில்லா** | | | |
| **குளத்துப்பாளையம்** | | | |
| M. காளியண்ண முதலியார் | 1 | 8 | 0 |
| **பெருந்துறை** | | | |
| அ. பொன்னுசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **ஈரோடு** | | | |
| E. K. சிவராம முதலியார் | 1 | 8 | 0 |
| **நடுப்பாளையம்** | | | |
| K. T. வீரப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| **முத்தீபாளையம்** | | | |
| அ. பொன்னுசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| ரெ. ரங்கசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **செட்டிபாளையம்** | | | |
| C. P. கந்தசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| **சேந்தாம் பாளையம்** | | | |
| மா. சின்னதம்பி முதலியார் | 4 | 0 | 0 |
| **மூலத்துறை** | | | |
| E. V. துரைசாமி முதலியார் | 3 | 0 | 0 |
| **வெள்ளவாவிப் புதூர்** | | | |
| காச்சிமுத்து முதலியார் | 2 | 1 | 0 |
| **சேலம் ஜில்லா** | | | |
| **தாரமங்கலம்** | | | |
| P. M. வையாபுரி முதலியார் | 1 | 8 | 0 |
| **ரங்கூன்** | | | |
| T. S. மருதுபாண்டிய முதலியார் | 8 | 0 | 0 |
| கா. முத்துலிங்க முதலியார் | 1 | 8 | 0 |
| **தீக்காலா** | | | |
| M. ராமலிங்க முதலியார் | 4 | 8 | 0 |
| **சிலோன்** | | | |
| **ஹட்டன்** | | | |
| M. V. P. சின்னசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| ப. அ. தண்டாயுத முதலியார் | 1 | 8 | 0 |
| ச. சடையப்ப முதலியார் | 1 | 8 | 0 |
| அ. சின்னையா முதலியார் | 1 | 8 | 0 |
| அரு. ஆறுமுக முதலியார் | 1 | 8 | 0 |

Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South
an Senguntha Mahajana Sangam, Madras, at 31 Armenian Street,
Madras, and is printed by A. Rangaswamy at The Progressive
Printers, 2/17, Coral Merchant Street, Madras.